"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டிற்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளுவதைத்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

[திருவளம் தி.பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

[பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 27 தி.பி.உ0உச — துலை— (அக்-நவம் 93) (ஓலை: 3)

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி-12

(சுவடி-26 ஓலை-10-இன் தொடர்ச்சி)

கனௌஜி, பஞ்சாபி, போவாடி, டோக்ரி, கன்ரைா, குசராத்தி, சரோட்டரி, கத்தியவாடி, கார்வா, இராசத்தானி, மார்வாரி, ஜெய்புரி, மீவாடி, குஜ்ரி, மால்வி, நிமடி, கண்டேசி, பிலி, பஃறி (அல்)காகு—குரா, குமவ்னி, கார்வாலி, சிர்மவுரி, பகட்டி, கியுடலி, குலுய், மண்டேலி, சாமேலி, கூடி, பத்ராவகி, தமகி, திரகி, கில்கிட்டி; கோகிஸ்டானி குரேசி, அவாங்கரி—லகண்டா, மேற்கு பகரி, (குரகி) குமவ்னி—கங்சோல், அசாமி, அவதி—லக்கிம்புரி முதலிய இந்தோ ஆரியக் கிளை மொழிகளிலும்,

சமோயெதி, எஸ்டிரியன், பின்னிஷ், அங்கேரியன், ஹீப்ரு, சிரியாக், பர்ஜி, கிரீக்கு, ஆஸ்கன், பழைய உயர் செர்மன், பழைய சாக்சன், மலேயன், திபெத்தன், ஸ்வகிலி—போர்த்துகீசு,

ருமேனியன், ஐலாண்டிக், சைனீஸ், சுமேரியன், அக்கேடியன், இந்தோநேசியன், மோன்—கெமர், முண்டா முதலிய அயன்மொழிகளிலும், —நூல்: 'பெற்றோரைப் பற்றி'—பக். 41-51;

—பிறவிளக்க விழுங்குவனதைப் பட்டியலிட்டுக் காட்டுவது, தமிழ்மொழியின் ஆணிவேரையும், பக்க வேர்களையும், சல்லி வேர்களையும் அகழ்ந்தெடுத்து, அவற்றுள் தமிழ் நீரோடிக் கிடப்பதை உணர்த்துவதாகும்.

'அம்மா' என்னும் சொல் சமசுக்கிருதத்தில் போய் வழங்குவது பற்றி அருளி அவர்கள் கீழ்வருமாறு குறிக்கிறார்.

'அம்மா' என்ற செந்தமிழ்ச் சொல்லினின்று 'அம்பா' amba என்று திரித்தொலித்துப் பயன்படுத்தப் பெற்ற சமற்கிருத வடிவத்தினின்று—ambaya(அம்பையா), ambada(அம்படா), ambala (அம்பலா), ambali (அம்பாலி), ambi (அம்பி), ambika (அம்பிகா) போன்ற ஒட்டு வைத்த ஆக்கங்களும் அம்மொழியில் தோற்றுவிக்கப் பெற்றுள்ளன.''

இக் கருத்தைத் தெரிவித்துவிட்டு, அவர் மேலும் இச்சொல் ஒன்றின் மொழியாய்விலேயே நிகழ்ந்த பெருந் தவறைக் கீழ்வருமாறு எடுத்துக் கூறுதல் கவனிக்கத் தக்கது.

''அம்மா'' என்னும் தமிழ் வடிவத்தின் தோற்றவுண்மையையும் அதனின் மிக நீண்ட நெடிய வரலாற்றுப் பதிவுகளையும்—தமிழிய இன மொழிகளில் அது பதிந்துள்ள ஆழ நிலைகளையும் அதனின் உலகக் கொடை நிலைகளையும் அறியாமல், 'சமற்கிருத—ஆங்கில அகராதி'யைத்தொகுத்த அறிஞர் மானியர் வில்லியம்சு அவர்கள்—தவறாகத் தம் நூலில் இவ்வாறு குறித்துள்ளார்.''

"In the south- Indian languages 'amba' is corrupted into'amma' and is often affixed to the names of goddesses, and females in general''.

—Monier—William's,Sanskrit—English Dictionary Page: 83

'அயலக அறிஞர்கள் பலரிடமிருந்து இம்மேற்குறித்தவாறான தவறான முடிபுகளைக் கொண்ட பன்னூற்றுக்கணக்கான திடுதிப்பான வெளியீடுகள் —உலகெங்கணும் புறம் போந்துள்ளன!''

'இத்தகு தவறு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு மேன்மேலும் பன்னூற்றுக் கணக்கான தவறு முடிபுகள் ஆங்காங்கும் தொடர்ந்து மேற்கொள்ளப் பெறுகின்றன;

'-தமிழிய மொழியறிஞர்களின் உண்மையை நோக்கிய உழைப்பு என்றே இந்நோய்ப் பாட்டு நிலைகளைத் தணிப்பதற்கான மருந்து ஆகும்; —மேற்படி நூல் — பக்: 51-52;

இனி, இவற்றினும் மேற்சென்று, அம்மா என்னும் சொல் அம்பா, அம்மை, அவ்வை, தவ்வை, தாய், ஆய்யாய், அய்யை, அஞ்ஞை என்றெல்லாம் திரிக்கும், பின்னர்,

ஆய் என்னும் தாய்ப் பொருள்தரும் சொல்லினின்று ஆயன், ஆயான், ஐயன், ஐயர், ஆசன், ஆசான் அம்ப்பா, அப்பா, அப்பன், அப்பர், தாயன், தாதன், தந்தவன், தந்தை, அத்தன், அச்சன்— ஆகிய பல்வேறு தந்தைப் பொருள் தரும் சொற்கள் தோன்றுவதை அவர் ஆய்ந்து விளக்கிச்சொல்லும் பாங்கும், சொல்லாய்திறனும் 'பெற்றோரைப் பற்றி' என்னும் நூலில் பார்த்து வியப்பதற்குரியன. (பக்: 53 முதல் 150வரை காண்க.)

இவ்வளவில் அவ் வாய்வு விளக்கம் நில்லாது, இப் படிநிலை வெளிப்பாட்டின் ஒவ்வொரு சொல்லும், உலகின் எம்மெம் மொழிகளில் போய்த் திரிந்தும் திசைந்தும் அதே பொருளில் வழக்கூன்றியுள்ளன என ஆய்ந்து காட்டும் மொழியாய்வு மதுகையும், பார்வைப் பரப்பும் அறிஞர்க்கு மலைப்பும் மருட்கையும் தருவனவாகும்:

எடுத்துக் காட்டாக, அவ்வை—ஔவை என்னும் சொல் வடிவம், தமிழிய (திரவிட) மொழிகளான கோட்டா, தோடா கன்னடம், குடகு, துளு, தெலுங்கு, பார்சி, காதர், கோண்டி, பிராகிருதம், மராத்தி, சமஸ்கிருதம்—முதலியவற்றுள்ளும்,

திபெத்தியன் குழுவிலுள்ள தாச்சு மொழியிலும்,
நாகா குழுவிலுள்ள தாங்குல், கங்கோய் மொழிகளிலும்,
குக்கி—சின் குழுவின் தாயெட்மெயோ—சின் மொழியிலும்,
லூயி குழுவிலுள்ள சாய்ரெல் மொழியிலும்,
பர்மிய குழுவிலுள்ள மரு—விலும்,

இந்தோ ஆரியக் குழுவிலுள்ள கொங்கனி மொழியிலும் வழங்கும் வடிவங்களையும்;

ஆய், ஆயி என்னும் சொல் வடிவங்கள், தமிழிய (திரவிட) மொழிகளான,

கன்னடம், கொலாமி, பார்சி, கோதா (ஓலாரி), கோண்டி, கோண்டா, பெங்கோ, முண்டா, குயி, குவி, குருக், மால்டோ—ஆகியவற்றுள்ளும்,

ஆஸ்ரோ—ஆசியாடிக் மொழிகளில் உள்ள முண்டி குழுவின் சவரா, கடாபி, மொழிகளிலும்,

மான் மொழிகளில் உள்ள லாண்ட்டன்யேவர, மான்—லான்—டியன் மொழிகளிலும்,

திபெத்திய— பர்மிய மொழிகளில் அடங்கிய இமாலய மொழிகளான, மஞ்சாட்டி அல்லது பாட்னி, சாம்பா லகுலி, கனுசி, போட்டோ மொழிகளிலும்,

திபெத்தியக் குழுவின் ஹலோக் மொழியிலும்,
நாகர் குழுவின், செமி, ரெங்மா, செஸாமா மொழிகளிலும்,
குக்கி—சின் குழுவின், தவுங்கோவா மொழியிலும்,

பர்மியக் குழுவில் உள்ள, மெயின்கோவோ அல்லது நகாச்சாங், மேடகயா மொழிகளிலும்,

இந்தோ—ஐரோப்பியக் குடும்பமும் ஆரியத் துணைக்குடும்பமாகவும் இணைந்து வழங்கும் குழுவில், டார்டிக் அல்லது பிசாக்கா கிளையில் உள்ள, வாய்—ஆலா, கலாசா, காவார்—பட்டி, பாசாய் (கிழக்கு, மேற்கு), சீனு, சில்கிட்டி, திராஸ்—சிலசி, தாஹ்—ஹனு, பொகுளி, தாடா—கிராஜி, கொஹிஷ்டானி—கார்வி, டோர்வாலி ஆகிய மொழிகளிலும்,

இந்தோ—ஆரியன் மொழிகளில் உள்ள, மராட்டி, தேசி, அசாமி, கிஸாடி, பிலி, சோடோச்சி, பங்வாலி, குலுய்—முதலியவற்றிலும்,

தமிழிய (திரவிட)மொழியான குயீவிலும்,

இந்தோ—ஆரியன் மொழிகளான பிராகிருதம், மால்வி, மேற்கு ஜவுன் சாரி, கியுதலி, குலூய், காடி பங்வாலி, ப்ஹாரி, பட்ரவாஹி, படாசி ஆகியவற்றிலும் உள்ள வடிவங்களையும் அவர் பரந்தாய்ந்து கண்டு காட்டியிருப்பது, அவரின் பேருழைப்பையும், பேரார்வத்தையும், பேராற்றலையும் நன்கு புலப்படுத்துவதாகும்.

இனி, இவையுமன்றி, அன்னையைக் குறிக்கும் தாய் என்னும் சொல், தமிழிய(திரவிட) மொழிகளான மலையாளம், கன்னடம், குடகம், துளு, தெலுங்கு, பெங்கோ, படகா, கோண்டி முதலியவற்றுள் போய் வழங்குவதையும் அதன் வடிவங்களையும் காட்டியுள்ளது பெரிதும் பாரட்டத் தக்கது.

இவற்றுடன் அன்னை என்னும் சொல்லும், இந்தியமல்லாத ஐனு, துருக்கி மொழிகளிலும், சகாய்—செமாங் இனத்தின் செமாங் மொழியிலும், பலுங்வா இனத்தின் அங்கா, மோங்லுவி மொழிகளிலும், முண்டா இனத்தின் சவாரா மொழியிலும், மான் மொழியினத்தின் மியோ—டசு, பீ—மியோ மொழிகளிலும், திபெத்தோ—பர்மிய மொழிகளாகிய அகா, மிரி, டாப்லா மொழிகளிலும், லோலோ—மோசோ குழுவின் லகு—மொழியிலும், நாகா குழுவின் பான் பரா, நாம்—சங்கின், சாங், மோசாங் ஆகிய மொழிகளிலும், கச்சின் குழுவின் சிங்பா அல்லது கச்சின், சிங்போ மொழிகளிலும், குக்கி—சின் குழுவின் தாடோ, சியின், லாய், லூசெய், பஞ்சோகி, பங்கா, ஹ ர ங் கா ல், ஹல்லம்' லேங்ரோங், அய்மால், அனல், சின்பாக், ஹிரோய்—லேம்காங், சோ, அல்லது கியாங் ஆகிய மொழிகளிலும், பர்மியக் குழுவின், சிஙிபூ அல்லது அட்சி மொழியிலும்,

இந்தோ—ஐரோப்பியக் குடும்பம், ஆரியன் துணைக்குடும்பமும் இவற்றைச் சேர்ந்த ஈரானியன் கிளைகளாகிய வாச்சி, சிக்னி, சரிகோலி, இஸ்கஸ்மி, ஜெபெல், முஞ்சனி அல்லது முங்கி, யுட்கா—மொழிகளிலும்,

டார்டிக் அல்லது பிசாசா கிளையின் மொழிகளான பஸ்காலி, வாசி—வெரி அல்லது வெரோன், கோவார் அல்லது சிட்ரலி, ஹிண்டி, ஒஸ்டிங், ஆஸ்டியாக், மோர்டுவின், ஹங்கேரியன்,

பின்னிஷ், அபாஸினியான், முதலிய மொழிகளிலும் சென்று வழங்குவதையும் அவற்றின் வடிவங்களையும் காட்டியுள்ளதும் வியக்கத்தக்கனவாம்.

இவையேயன்றி ஐயன் என்னும் தந்தையைக் குறிக்கும் ஆண்பால் தலைமைப்பெயரும், தமிழிய மொழிகளிலும், இந்திய ஐரோப்பிய ஆரியக் கிளை மொழிகளிலும் திபெத்திய—பர்மிய மொழிகள். ஆஸ்ட்ரோ—நேசிய மொழிகளிலும், ஆஸ்ட்ரோ—ஆசிய மொழிகளிலும், திபெத்தியக் குழு மொழிகளிலும் பரவியிருப்பதையும் எடுத்துக் காட்டும் வகை இறும்பூதடையச் செய்கிறது.

இவை தவிர, அப்பா என்னும் தந்தைப் பெயர் குறிக்கும் சொல், தமிழிய மொழிகளிலும், கொரியன், மலாய், சகாய், செமாங், தாய், கடாபி, பிராவ், கவெளரி, டிமால்: டாமி, லிம்பூ, மகாரி, நேவாரி, டோடோ, லாடி, நங் திபெத்திய மொழிகள், நாகா மொழிகள், பர்மிய மொழிகள், நாகபுரி, ஒரியா, பீகாரி, மைதிலி, பிற வடவிந்திய மொழிகளிலும் பிரெஞ்சு, இலத்தின், கிரீக்கு, பின்னிஷ், செருமன், சிங்களம் முதலிய நூற்றுக்கணக்கான உலக மொழிகளெல்லாம் அப்பன், அப்பு, அபு, அப்பே, ஐப்போ, அப்பி, பப்பா, ஆபன், அபுக், பா, அபா, ஃபா, அபோ, பாய், அப், அபவோ, பப்பா, பாபா, ஃபாபா, போ, பு, பியா, பாபு, அவா, பாப், பாபோ, பாவோ, வப்பா, வாப்பா, பிபோ, பியோ, அப்பாய், அப்பாங், ஆபே, ஆபெஸ், பாபஸ், அபாடு— என்றவாறெல்லாம் போய் வழங்கி வருவதைக் கண்டு காட்டியிருப்பதைக் கண்டால், சொல்லாய்வறிஞர் அருளியினது ஆழ்ந்து அகன்ற அறிவாண்மையும், பரந்துபட்ட ஆய்வுப் பரப்பும் தெரியவரும்.

இத்தகு திறலாண்மையும் விறலாண்மையும் கொண்ட ஒரு மொழியியல் பேரறிஞரைத்தான், இவரின் பேராற்றலின் ஒரு நுண்துகளுக்கும் ஈடாகாத ஒரு கல்லூரி ஆசிரியர்—பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு பேரா(!)சிரியர்— தமிழினது எழிலும் முதலும் அறியாத முழுக்கட்டையான ஒருவர்—அங்கு நடந்த ஒரு மொழியியற் கருத்தரங்கிற்கு அழைப்பு விடுக்காமற் போனதையும், அதுபற்றி அப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவரைக் கேட்டபொழுது, 'அருளி, ஓர் எதிர்மாறுன—முரண்பாடான (Contradictory) குணவியல்பு உள்ளவர்'' (Charactor) என்றுகூறித் தம் புல்லறிவாண்மையை வெளிப்படுத்தியுள்ளதையும் கேள்வியுற்றுப் பெரிதும் வருந்த வேண்டியிருந்தது. எச்சில் இலைகளெல்லாம் பல்கலைக் கழகக் கோபுரத்தில் ஏறியமர்ந்து அடிக்கின்ற அரசியல் காற்றில் படபடத்துச் செருக்குற்றுக் கிடப்பதைக் காலத்தின் கோளாறாகக் கருதாமல் வேறெவ்வாறு மதிப்பிடுவது?

அடுத்து, பேரறிஞர் அருளி அவர்கள் வாழ்கின்ற இதே நாளில், அவர் போல் தமிழ்மொழி ஆய்விலும் தோய்விலும் ஈடுபட்டுழைக்காத அரை வேக்காடுகள் சிலரும் மொழியாய்-

வறிஞராக உலா வரும் இழிநிலையும் இருக்கத்தான் செய்கிறது, என்பதற்கு இன்னொருவர் எடுத்துக் காட்டாக உள்ளார்.

தென்பகுதி மாவட்டத்துச் சாத்தூரைச் சேர்ந்த, வண்ணனை மொழியியல் (Descriptive Linguistics) ஆய்வில் ஈடுபட்ட ஏமாற்றுக் காரர் ஒருவர், "தமிழ் உலக முதல் மொழி" என்னும் கருத்தை ஏதோ தாம் கண்டுபிடித்ததாகக் கூறிக்கொண்டு, தம் பண வலிமையால் உலக நாடுகளெல்லாம் சுற்றுலா வந்து, தாம் ஏதோ பெரிய மொழியாய்வறிஞர் போல், பார்ப்பன ஆளுமையிலுள்ள வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலுள்ள கற்றுக்குட்டி அதிகாரிகளைக் கால் கை பிடித்து, ஓரிருமுறை தம் சொல்லாய்வுப் பிதற்றல்களை விளக்கியதும், அதேபோல் தமிழறியாத் தம்பிரான்கள் நடத்தும் சிற்சில இதழ்களில் கட்டியுரைகள் வெளியிட்டுத் தம் வாய்க்கு வந்தவாறெல்லாம் உளறி வருவதும், தமிழ் மொழிக்கே மானக் கேடானதும், இழுக்குத் தருவதுமான அழுக்குச் செயலாகும்.

அறிஞர் அருளியை ஏதோ நாம் தூக்கித் தாங்குவது போல் எவரும் கருதிவிட வேண்டா. அவருடைய மொழியியல் ஆய்வறிவும், உழைப்பூக்கமும், உழைப்புமே அவருடைய தகுதிக்கும் திறனுக்கும் வெளிப்பாட்டிற்கும் அடிப்படையானவை. அவற்றை அவர் அவருடைய பல்வேறு நூலாக்கங்கள் வழி மெய்ப்பித்துள்ளார். அவற்றை பாராதவர்களும் படித்தறியாதவர்களும் மட்டுமே அவரைப் பற்றிய நம் மதிப்பீட்டைத் தவறுதவும், ஏதோ அவரை நாம் வேண்டுமென்றே மேம்படுத்திக் கூறுவதாகவும் பொருமையால் கூறுவர்.

அவருக்கு இருக்கும் இயற்கையான மொழியாய்வு ஆற்றல் நரம் பெரிதும் வியக்கத்தக்கதும் மதிக்கத்தக்கதுமாகும். அவருக்குள்ள மொழியாய்வு ஈடுபாடு இயற்கையானது. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தம் ஒப்பியன் மொழிநூலுள் மொழிநூல் ஆசிரியர்க்குத் தேவையான ஏறத்தாழ பதினைந்து மூல அறிவு நிலைகளைக் கூறுகிறார். (இவற்றைத் தென்மொழி சுவடி: 17; ஓலை: 6-7 (பாவாணர் நினைவிதழ்) பக்கம். 68, 69, 70, 71—இல் குறிப்பிட்டுள்ளோம். அவற்றை ஆங்குக் காண்க.) அங்குக் கூறப் பெற்றுள்ள அத்தனை அறிவு நிலைகளுக்கும், 'தகுதி' நூலாசிரியர் சொல்லாய்வறிஞர் அருளி அவர்கள் மிகவும் தகுதியுடையவர் என்பதை அவரின் ஆய்வு நூல்கள் உறுதியாய் மெய்ப்பிப்பதை உணரலாம். இவ்வறிவு நிலைகள் அவர்க்கு இயற்கையிலேயே படிந்திருப்பதுடன், அவர் அவற்றை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு, மொழிஞாயிறு பாவாணரினும் பலபடிகள் மேம்பட்டவராகவே விளங்குகிறார் என்பது நம் அசைக்க முடியாத கருத்தாகும். மேலும், ஓர் உண்மையான அறிஞர்க்குள்ள இயற்கையான தகுதி என்னவென்றால், அவர் எந்தத் துறையில்—முயற்சியில்— ஈடுபடுகிறாரோ, அவரால், எந்தச் சூழ்நிலையிலும் அந்த முயற்சியைச் செய்யாமல் இருக்க முடியாது என்பதுதான். இவ்

இரு தகுதிகள் வகையிலும் சில எடுத்துக் காட்டுகளை இங்கு அன்பர்களின் தெளிவுக்காக எடுத்துக் காட்டுவோம். இவை, அவரின் 'தமிழ் சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் அவராற்றிய மொழியியல் உரைக'-ளிலிருந்து எடுக்கப் பெற்றன.

முதலில், அவர் தமிழ் மொழியினது வேர்ச்சொல் ஆய்வு பற்றிக் குறிப்பிட்ட ஒரு கருத்தைக் காணுக.

"சொல்லின் வேரைக் காணற்கும் கண்டுபிடித்தற்கும் இவ்விந்திய மண்ணில் தமிழ்மொழி ஒன்றில் மட்டுந்தான் இயல்வதாகும். இவ்விந்திய நாட்டில் பயிலப் பெறும் எம்மொழியை எடுத்து வேர்ச் சொல்லாய்வு நிகழ்த்தினும், அதனின் இறுதியான முடிபாகத் தமிழ் மூல வேரே ஒவ்வொரு பொருட் சொல்லிலும் காணக் கிடைப்பதாகும். வரலாற்றியலொடு ஏரணவியல் துணைக்கொண்டு, அறிவியல் அடிப்படைச் சிந்தனையில் ஆயப் பெறுகின்ற சொல் முடிபு தரும் உண்மை இதுவாகவே இருக்கின்றது".

—மேற்படி நூல், முதலாம் தொகுதி பக். 12;

இக் குறிப்பையொட்டி, அவர், வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் என்னும் பரிதிமாற்கலைஞர் அவரின் 'தமிழ் வரலாறு' என்னும் நூலுள் ஒரு கருத்தையும் எடுத்துக் காட்டி இணைத்துக் கூறுவார். அஃது, இது:

"தமிழர்களின் மறைநூல், மந்திரநூல் போன்ற அரிய நூல்களைச் சமற்கிருதத்தில் மொழிபெயர்த்துக் கொண்டு, மூலநூல்களை அழித்து விட்டு, வடமொழியினின்றே அவ்வரிய கருத்துகள் வந்தன போலக் காட்டினார்கள், பிராமணர்கள்"

(பக். 29;)

இனி, அருளி அவர்கள் 1982-ஆம் ஆண்டு இறுதி வாக்கில் சென்னையில், மார்சல் சாலையிலுள்ள, 'தமிழ்—சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆற்றிய பத்து மொழியியல் சொற்பொழிவுகளில், சமசுக்கிருதச் சொற்கள் என்று சமசுக்கிருதவாணரால் கூறப்பெற்று வரும் சிக்கலுக்குரிய ஐம்பது சொற்களை எடுத்துக் கொண்டு, அவை முழுவதும் தூய தமிழ்ச் சொற்களே என்று மொழிப் புல அறிஞர்கள் திருவாளர்கள் முனைவர் திரு. ஆறு. அழகப்பனார், பேரா. சுப்பு (இரெட்டியார்) அன்றுசென்னைப்பல்கலைக்கழகத்தமிழ்த்துறைத்தலைவராக இருந்த முனைவர் சி. பாலசுப்பிரமணியனார், மாநிலக் கல்லூரி—தமிழ்த் துறைத் தலைவராயிருந்த, மறைந்த முனைவர் மெ. சுந்தரனார், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பொன்கோதண்டராமனார் (பொற்கோ), இலயோலா கல்லூரித் தமிழ்த்-துறைத்தலைவராயிருந்த முனைவர் க. ப. அறவாணனார், தமிழியல் பேறறிஞர், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், இவர்களுடன் இக்கட்டுரையாசிரியர் ஆகியோர் இலைமையிலும் முன்னிலையிலும் மொழி ஆய்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்திக் காட்டினார்;

அச் சொற்பொழிவுகளில் வடசொற்கள் என்று பெரிதும் விடாப்பிடியாகத் தொடர்ந்து கூறப்பெற்றுவரும் மண்டிலம் கன்னம், ஊசி, புதல்வன், புத்தகம், வித்து, நேசம், பாசம், பாரம், சாடி, ஆரம், பந்து, தாரம், பருதி, கரணம், காரணம், வஞ்சனை, தூரம், சக்கரம், தவம் முதலிய, சொற்களையெல்லாம் தூய தமிழ்ச்சொற்கள் என்று வேர்கள், மூலங்கள், வழக்குகள், பொருள்கள், தமிழ்மொழி, பிறமொழிச் சான்றுகள் முதலியவற்றைத் தெளிவாகவும் பரவலாகவும் காட்டிப் பன்னூற்றுக்கணக்கான அறிஞர்கள் கூடியிருந்த பேரவையின்கண் அறுதியாகவும் உறுதியாகவும் நிலைநாட்டினர்.

இவ்வரிய ஆழமான சொற்பொழிவுகள் போல, இதுவரை உள்ள தமிழ்மொழி வரலாற்றில் முன்னோ பின்னோ வேறு எந்த மொழியியல் இலக்கிய, இலக்கணவியல் பேரறிஞராலும் ஒரே ஒரு சொற்பொழிவுதானும் நிகழ்த்தப் பெறவில்லை என்பதை, அக்கூட்டங்களில் சிலவற்றிற்குத் தலைமையும் பலவற்றிற்கு முன்னிலையும் தாங்கியவர் என்னும் தகுதி கொண்டு நாம் உறுதிப் படுத்திக் கூறுகிறோம். ஏன்? மொழிப் பெரும் புலவர் மொழிப் பேரறிஞர், தனித்தமிழ்க் குரிசில், சொல்லியல், மொழியியல் வல்லுநர், தனித்தமிழ்க் காவலர், தனித்தமிழ் ஞாயிறு, மொழிநூல் முதுபெரும் புலவர், மொழியியல் ஞாயிறு, புலமைக் கடல், மொழிஞாயிறு என்று 1959 முதல் 1970 வரை இக்கட்டுரையாசிரியராகிய அவரின் முதல் மாணவரால் தென்மொழி இதழ் வழி பல்வேறு பட்டங்கள் கொடுக்கப்பெற்ற மொழிநூற் கதிரவன் ஞா: தேயநேயப்பாவாணர் அவர்களாற் கூட இத்தகையதொரு சொற்பொழிவு எங்கும் எப்பொழுதும் நிகழ்த்தப் பெறவில்லை என்று பணிவொடும் பண்பொடும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இச் சொற்பொழிவுகள் நூல் வடிவில் ஐந்து தொகுதிகளாக 1985-இலேயே வெளிவந்துள்ளன. இவற்றின் பெருமதியும், அருமையும் உணரும் நடுநிலை தமிழியல் அறிஞர்கள், அருளியார் அவர்கள் பற்றி இங்கு எடுத்துக் கூறுவனவற்றை எவ்வகையானும் மறுத்தோ குறைத்தோ மதிப்பிட மாட்டார்கள் என்பது திண்ணம்.

இவற்றை எதற்காக இத்துணை அழுத்தத்துடனும் அக்கறையுடனும் கூறுகின்றோம் எனில், தமிழ், தமிழ் என்று கண்மூடிக் கொண்டு கதறிக் காசடிக்கும் அறிஞர்களிடை, எவ்வகைச் சிறு நலனும் கருதாமல் தம் இளமை முழுவதும் தமிழின் பொருட்டாகவே உருக்கி வார்த்துக் கொண்டிருக்கும் உண்மை மொழியியலறிவாராய்ச்சிப் பேரறிஞர் ஒருவரைப் பற்றி இந்நாடும் மக்களும் எந்தமிழ்ச் சான்றோரும் இன்னும் கண்திறந்து கண்டு கொள்ளவோ, கருத்துக் கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ போற்றிக் கொள்ளவோ இல்லையே எனும் மன ஆற்றாமையாலேயன்றி, அவரை ஏதோ ஒரு தனிநலம் கருதியோ, தனியுறவு பாராட்டியோ அன்று என்க.

(தொடரும்)

வில(ா)ங்கு

நாடக ஆக்கம்: அதியமான்

(பாவலரேறு அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்)

முதலுரை :

குற்றம் செய்பவனும், அக்குற்றத்தை உசாவித் தீர்ப்பளிப்பனும் ஒருவனாகவே இருந்தால் ஞாயம் கிடைக்காது. மக்களுக்குக் காவலனாக இருக்கும் தலைவனே குற்றம் செய்தால் அவனை யார் கேட்பது? அவனைத் தண்டனைக்குள்ளாக்குபவர் யார்? இதற்கு விடை காண முயலாமல் இருப்பதாலேயே விலாங்காக வழுக்கி ஓடிவிடுகிறான். நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று தலைவன் செய்கின்ற குற்றத்தையும் சுட்டிக் காட்டித் தண்டித்தால் குற்றமே குமுகாயத்தில் நிகழாது. மக்கள் தன் தலைவனுடைய எல்லா வகையான செயல்களையும் பார்க்கிறார்கள். தலைவன் தான் செய்யும் குற்றத்தை உணர்ந்து குற்றத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் தலைவனை நம்பி வாழும் மக்களுக்கு அவன் ஒழுக்கமுடையவனாகக் காட்சி அளிக்க வேண்டும்; அதனாலேயே 'மன்னவன் கோல்நோக்கி வாழுங்குடி' என்பார் திருவள்ளுவர்.

தலைவன் அறநெறி வழுவாது, அறன் தழுவி வாழவேண்டும்; ஓரிரு குற்றங்களைச் செய்து கொண்டு தப்பித்துக் கொண்டாலும் அவனுடைய கெட்ட செயல்கள் அவனை ஒரு நாளைக்கு ஒறுத்தே தீரும்.

இப்பாவியத்தில் ஒரு பெண்ணைக் கற்பழித்த தலைவன் மறை அவையின் நடுவராக இருக்கிறான். எனவே எதுவும் பேசமுடியாமல் பழிக்கு ஆளான அப்பெண் போய்விடுகிறாள். எனவேதான் இதன் தலைப்பில் விலங்காக இருந்து விலாங்காகத் தப்பிக்கிறான் எனக்காட்டப்பட்டுள்ளது. விலாங்கையும் கண்வைத்து ஒரு நாளைக்குப் பிடித்துவிடுவார்கள்.

காட்சி—1

உறுப்பினர் : மனைவி பொன்னம்மாள்; கணவன்.

இடம் : வீடு

காலம் : காலை 11 மணி அளவில்.

மனை-பொன் : (கடிதம் ஒன்றைப் பிரித்துப் படித்துவிட்டு) ஐய்யீ (தாளை மார்போடு சேர்த்துக் கொள்கிறாள்)

கண : என்னது, ஐய்யீ, கிய்யீ? கடிதம் எங்கிருந்து வந்துள்ளது?

மனை-பொன் : கடிதமா இது? ஆணை...ஆணை!

கண : ஆணையா? எங்கே கொடு பார்க்கிறேன்.

மனை-பொன் : (கணவனிடம் அதைக் கொடுக்கிறாள்) பாருங்கள் எனக்கு வேலைக்கான ஆணையிது.

கண : ஓ! கோ! வேலைக்கான ஆணையா? என்ன பெரிசா குதிக்கிறாய்! இருபதினாயிரம் உருவாய்களைக் கொடுத்து இந்த வேலையை வாங்கி இருக்கிறேன், சும்மாவா?

மனை-பொன்: என்ன இருபதினாயிரமா?

கண: ஆமாடி, ஆமாம்; இருபதினாயிரம் கையூட்டுக் கொடுத்திருக்கிறேன்'

மனை-பொன்: இச் செய்தி முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால் நான் தடுத்திருப்பேன். ஆசிரியர் வேலைக்குரிய எல்லா வகைத் தகுதிகளும் எனக்கிருக்கின்றன. ஐந்தாண்டுகள் முன்பணி அறிவும் உண்டு. பாடங்களில் ஒவ்வொன்றிலும் 80 முதல் 90 விழுக்காடு மதிப்பெண்கள் உள்ளன. அப்படி இருந்தும் பணம் கொடுத்துத் தான் இந்தப்பணியை வாங்க வேண்டுமென்றால் இதைப்போன்ற வேறு கொடுமை உண்டா?

கண : பொன்னம்மா! உன்னிடம் என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கமாட்டார்கள். எவ்வளவு பணம் கொண்டு வந்திருக்கிறும் என்று கேட்டே வேலையின் தகுதி உறுதிப்படுத்தப்படும்; பணம் கொடுக்கும் தகுதியே இனமானமற்றவர்கள் ஆளும் ஆட்சியில் தகுதி. அந்தத் தகுதியைத்தான் இனக் காவலர்கள் எனத் தங்களைக் கூறிக் கொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள்; நீ பிள்ளைகளுக்குப் படித்துக் கொடுக்காவிட்டாலும் யாரும் ஏன் எனக் கேட்கமாட்டார்கள்; நீ பணம் கொடுத்து வேலைக்கு வந்திருக்கிறாய் என்று மேலதிகாரிகளுக்குத் தெரிந்தால் உன்னை யாரும் எதையும் கேட்கமாட்டார்கள்; உறங்கினாலும் பார்த்தும் பாராதது போலப் போய்விடுவார்கள்;

மனை-பொன் : நாடு குட்டிச்சுவராய்ப் போய்விடும், போங்க!

கண : நாட்டைப் பற்றி எவனுக்கும் கவலை இல்லை; சட்டப் பேரவைக்கு ஒப்போலையளித்து அனுப்புகிறார்களே அவர்களுக்கும் நாட்டைப் பற்றிக் கவலையில்லை; ஒப்போலையை வாங்கிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் நாட்டைப்பற்றிக் கவலையில்லை; உனக்கேன் நாட்டைப் பற்றிக் கவலை வரவேண்டும்? பணத்தைக் கொடுத்து வேலை வாங்கியாகிவிட்டது. போய் வேலையைப் பாரு. வீட்டைப் பற்றி நினை; நம்மை ஆளும் அமைச்சர்களுக்கும் அவர்களுடைய வீட்டைப் பற்றித்தான் கவலையே தவிர நாட்டைப் பற்றி மறந்துகூட நினைக்கமாட்டார்கள் போ, போ; வேலையை ஒப்புக் கொள்;

மனை-பொன்: (வேலையை ஒப்புக்கொள்ளப்போய் விடுகிறாள்);

(திரை)

காட்சி—2

(நான்கு திங்கள் கழித்து)

உறுப்பினர்: கணவன், பொன்னம்மாள் (மனைவி)

இடம்: வீடு

காலம்: மாலை 5 மணி

(கணவனும் வேலை முடித்து வீட்டிற்கு வந்து அமர்ந்திருக்கிறான்; மனைவி பொன்னம்மாள் மனக்கவலையுடன் கையில் ஒரு கடிதத்துடன் வீட்டிற்குள் வருகிறாள்).

மனை-பொன்: ஏங்க, பார்த்தீர்களா, இந்தக் கல்வித்துறையின் கல்நெஞ்சை! என்னைப் பக்கத்து ஊர் பெண்கள் பள்ளிக்கு மாற்றி விட்டார்கள்.

கண: (அதிர்ச்சியுடன்) அதற்குள்ளாகவா? என்ன சொல்லுகிறாய்?

மனை-பொன்: ஆமாங்க; என்னை மாற்றி விட்டார்கள். நாளைக்கே நான் அந்தச் சிற்றூருக்குப் போகவேண்டும் (கடிதத்தைக் காட்டி) இதோ ஆணை.

(வாங்கிப் படித்து விட்டு) இ'து என்ன? தீங்கிழைப்பு (அநீதி) ஏன் பொன்னம்மா அந்த ஊருக்கு இங்கிருந்து நாள்தோறும் போய் வரமுடியுமா?

மனை-பொன்: நாள்தோறும் போய் வர முடியாதாம்; ஒரு கிழமைக்கு ஒரு தடவைதான் வரலாமாம்; காரி, ஞாயிறு மட்டுமே வீட்டிற்கு வர முடியும் போலத் தெரிகிறது. போக்குவரத்து சரியில்லாத ஊர் என்று என்னோடு வேலை பார்க்கும் ஆசிரியர்கள் சொன்னார்கள்.

கண: அடா, தீயோர்கள் (பாவிகள்)! மாந்த இயல்பு அறியாத அறிவுலிகள். நம்மைப் பிரிப்பதில் அவர்களுக்கு என்ன மகிழ்ச்சியோ? நான் இங்கு அரசு வேலை பார்ப்பது தெரியாதோ?

மனை-பொன்: நன்றாகத் தெரியும்; நான் சொல்லி இருக்கிறேன். அது மட்டுமில்லீங்க; நான் போகிற ஊருக்கு என்னோடு வேலை பார்க்கும் என்னைப் போன்ற பெண் ஆசிரியை மூன்றாண்டுக் காலமாக மாற்றுதல் கேட்டு மன்றாடிக்கொண்டிருக்கிறார்; அவருடைய கணவர் அந்தச் சிற்றூரில் அஞ்சலகத்தில் பணி செய்கிறார், அந்த ஆசிரியையை மாற்றாமல் என்னை மாற்றித் துன்பப்படுத்தியிருக்கிறார்கள்.

கண: உனக்கு பகராளியாக (பதிலாக) வருபவர் யாரோ?

மனை-பொன்: ஆள் போடவில்லை; என் இடம் வெற்றிடமாகவே உள்ளது.

கண: யாரும் உன் இடத்தைக் கேட்டுக் கையூட்டுக் கொடுத்திருக்க மாட்டார். எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள் (விரலை நெற்றியில் வைத்து) இனி என்ன செய்யலாம்?

மனை-பொன்: பகராளியை அமர்த்தாததால் மாவட்டக் கல்வி அதிகாரியிடம் வேண்டுகை ஒன்றைக் கொடுத்துப் பார்க்கலாம்.

கண: அப்படிச் செய்; நீயே ஒரு வேண்டுகையை எழுது; நான் இங்கு வேலை பார்ப்பதைக் குறித்து எங்களைப் பிரிக்க வேண்டாம் என்று குறிப்பிட்டு ஒரு வேண்டுகையைக் கொடு. நானும் கெஞ்சிப் பார்க்கிறேன். கொஞ்சம் மனமிரங்க மாட்டார்களா?

மனை-பொன்: (அமர்ந்து எழுதிக் கணவனிடம் கொடுத்து) கேளுங்க; நீங்களே நேரில் போய்ப் பார்த்து நம் நிலையைச் சொல்லி வேண்டுகையைக் கொடுங்கள்.

கண: சரி, பார்ப்போம்; நீ நாளைக்குப் போகவேண்டுமல்லவா?

மனை-பொன்: ஆமாம், காலையில் விலகல் சான்றை வாங்கிக் கொண்டு அந்த ஊருக்குப்போய் விடுவேன். காரியன்று வருவேன்.

கண: நாளைக் காலையில் வேலையை ஒப்புக்கொண்டபின் மாலையில் இங்கு வந்துவிடு. நான் நாளைக்கு விடுப்பில் வந்து உனக்குத் தக்க ஏற்பாடு செய்துவிட்டு வந்துவிடுகிறேன்.

மனை-பொன்: பணம் கொடுத்து வேலைக்கு வந்த செய்தி தெரிந்தால் என்னை யாரும் ஒன்றுஞ் செய்யமாட்டார்கள் என்றீர்களே, இப்போது என்னை மாற்றிவிட்டார்களே!

கண: உன் இடத்தைக் கேட்டு யாராவது பணம் கொடுக்க முன் வந்திருப்பார். அதற்காகவே இப்படிச் செய்திருப்பார்கள். சரி. நீ போ. நான் மாவட்டக் கல்வி அதிகாரியிடம் உன் வேண்டுகையை கொடுத்துவிட்டு வருகிறேன்.

(பொன்னம்மாள் போய் விடுகிறாள்) (திரை)

காட்சி—3

உறுப்பினர்: கணவன், மனைவி பொன்னம்மாள், தலைமை ஆசிரியை.

இடம்: சிற்றூரில் தலைமை ஆசிரியையின் வீடு

காலம்: பிற்பகல் 1 மணி.

(தலைமை ஆசிரியை நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். பொன்னம்மாள் தன் கணவனோடு தலைமை ஆசிரியை வீட்டிற்குள் நுழைகிறாள்)

கண: வணக்கம்முங்க.

த. ஆ: (நிமிர்ந்து பார்த்து) வணக்கம்.

மனை பொன்: வணக்கம்.

த. ஆ: வணக்கம், வணக்கம். வாங்க, (திண்ணையைக் காட்டி) அமருங்கள். என்ன செய்தி?.. (பொன்னம்மாள் கணவனைக் காட்டி) நீங்க...

கண: (மனைவி பொன்னம்மாளைக் காட்டி) இது என் மனைவி.

த. ஆ: ஓகோ! அப்படியா? நேற்றுத்தான் வேலையை ஒப்புக் கொண்டார்கள். உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அணியமாக இருக்கிறேன். என்ன வேண்டும்? சொல்லுங்கள்.

கண: நான் வேலை பார்ப்பது பக்கத்துப் பட்டணம், அங்கிருந்து என் மனைவி இங்கு மாற்றப்பட்டிருக்கிறாள். நாள்தோறும் அங்கிருந்து இங்கு வந்துபோவதற்குப் பேருந்து ஏந்துகள் (வசதிகள்) இல்லை. தொலைவும் சற்று மிகுதி. எனவே இங்கேயே தங்கித் தானிருக்கவேண்டும்.

த. ஆ: ஆமாம். அதுவே நல்லது; நாளும் பெண்கள் அலைய முடியாதது தான். சரி தங்க வீடு வேண்டும், அப்படித்தானே.

கண: ஆமாம். ஆமாம். பாதுகாப்பான வீடு...

த. ஆ: ஒரு வீடு இருக்கிறது. பாதுகாப்பானதுதான். உங்களுக்கு வீடு தேவைப்படும் என்றெண்ணியே திறவுகோலை வாங்கி வைத்திருக்கிறேன். வீட்டைப் பார்க்கிறீர்களா? அங்கேயே இன்றிரவு தங்கலாம்.

கண: சரி! (மூவரும் போய்விடுகிறார்கள்) (திரை) (தொடரும்).

இம்மாதச் சிறப்பு மடல் :

திருக்குறள் மெய்ப்பொருளுரை...!

அன்னைத் தமிழின் அருந்தவச் செல்வரே! வணக்கம். தாங்கள் கொடுங்கோலர்களின் ஆட்சிச் சிறையினின்று விடுதலை பெற்ற பின்னர்—தங்களை நேரில் காண வேண்டுமென்ற எண்ணம், ஏக்கம் மேலிட அன்னையைக் காணும் குழந்தை போன்று, நான் வந்தேன்; கண்டேன்.

மூன்று நாள்கள் தங்களுடன் இருந்த நாள், தாங்கள் சிறையில் இருந்தபொழுது எழுதிய 'திருக்குறள் மெய்ப்பொருள்' உரையை நூற்றுக்கணக்கான பக்கங்களைக் காணும் பேறு பெற்றேன். அதில் ஒவ்வொரு திருக்குறளுக்கும் தாங்கள் எழுதிய விளக்கம், பொருள், கருத்து, மேற்கோள், என்னை மெய்சிலிர்க்க வைத்தன. அதிலும் துறவற இயல் பற்றித் தாங்கள் இயற்றிய உரை மாணிக்கவுரை போன்றது. முத்து முத்தான தங்கள் கையெழுத்துகள், மணிமணியான கருத்துகள், கண்ணின் கருமணிகள் போன்று எண்ணத் தக்கன; போற்றத் தக்கன; ...ஈற்றிலோர் கூற்று: உறுதியிட்டு அறுதியுடன் உரைப்பேன்; தங்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரை வெளிவந்தபின் இதுகாறும் வெளிவந்த திருக்குறள் உரைகள் எல்லாம் உருத்தெரியாமல் மறைந்து போகும்.

உண்மையை உரைக்கிறேன்; 'திருக்குறள்' என்ற தெய்வ அறநூல் தோன்றிய நாள்முதல் இன்றுவரை—ஏன் இனிஎன்றுமே இப்படிப்பட்ட மெய்ப்பொருள் உண்மைப் பொருள் உரையைக் கண்டதில்லை; காணப்போவதில்லை! ஒவ்வோர் அதிகாரத்தின் முன்பும் காணும் அரிய விளக்கம், எடுத்துக்காட்டுகள், கழக நூல்களின் மேற்கோள்கள் எண்ணுதோறும் எண்ணுதோறும் வியப்பையும், மலைப்பையும், மகிழ்வையும் ஏற்படுத்துகின்றன; தங்களின் முத்துமுத்தான கையெழுத்தையும் மணிமணியான கருத்துகளையும் காணவும் களிப்புறவும் பெரும் பேறு பெற்றேன் நான் என்றே எண்ணுகிறேன்: இயற்கையின் இனிய அரிய நூல் திருக்குறள்; அதன் மெய்ப்பொருள் உரையும் அப்படியே.

இந்த உலகில் சிறையினின்று எழுதப்பட்ட நூல்கள் எண்ணற்றன; உண்மைப்போராளிகள் பலர்; அதுவும் உண்மை! ஆனால் கொடுமையான 'தடா'ச் சட்டத்தால், மிகவும் கீழ்த்தரமான முறையில் பேரறிஞர் ஒருவர் நடத்தப்பட்டது நாணத்தக்க செயல்! மானங்கெட்ட செயல்! இதில் வியப்பான செய்தி ஒன்று உண்டு என்றால், அது அப்படிப்பட்ட கொடுமையில்—சிறையில் இருந்தபொழுதும்கூட—உலகின் ஒப்பற்ற ஓர் அறநூலாம் திருக்குறளுக்கு "உரிய உண்மையான"—மெய்யான—மெய்ப்பொருள் உரையைத் தொடர்ந்து எழுதத் தொடங்கியதே! தங்களின் உடலை, உயிரைத் துன்ப நெருப்பில

செந்தமிழர் போர்க் குணத்தால் மேலேற வேண்டும்!

—'அறிவியப் பாவலர்', சாலையார்.

கடைப்பலகை தனை உடைத்துக் கீழிறக்க வேண்டும்,
கனித்தமிழில் அப்பலகை இல்லாத போது!
தடைச்சுவரை உடனேயே இடித்துவிட வேண்டும்,
தமிழ்வழியில் அதையாரோ எழுப்புகின்ற போது!
படைப்புயலாய்த் தமிழ்மக்கள் சீறிஎழ வேண்டும்,
பைந்தமிழை அவமதிப்போர் திரள்கின்ற போது!
நடைப்பிணமாய் உலவிவந்த பழங்கதைகள் போதும்,
நற்றமிழர் போர்க்குணத்தால் மேலேற வேண்டும்.

தெருக்களையே சுவரெழுப்பித் தடுத்துவிட வேண்டும்,
தெருப்பெயர்கள் நந்தமிழில் இல்லாதபோது!
கருத்திருண்ட ஆட்சிகளைக் கலைத்துவிட வேண்டும்,
கண்ணின்றி அயல்மொழியில் கவிழ்ந்துவிடும் போது!
நெருங்கியவ ராயினும் ஒதுக்கிவிட வேண்டும்,
தீந்தமிழ்க்கே அவர்பகையாய் உருவாகும் போதில்!
உருப்படியாய் வாழாமல் உதிர்ந்தகதை போதும்;
உயர்தமிழர் போர்க்குணத்தால் மேலேற வேண்டும்!

பிறந்துவரும் தமிழரெலாம் தமிழ்படிக்க வேண்டும்;
பிறதுறைகள் அத்தனையும் தமிழில்வர வேண்டும்!
மறந்துவிட்ட தமிழ்நினைவை எழுப்பிவிடும் வண்ணம்
வளர்தமிழே எங்கெங்கும் எதிரொலிக்க வேண்டும்!
'இறந்துபடும் வேளையிலும் தமிழ்கேட்க வேண்டும்'
எனும்நினைவே தமிழர்களின் நினைவாக வேண்டும்!
திறம்மறந்து மோழைகளாய்த் திகைத்தகதை போதும்;
செந்தமிழர் போர்க்குணத்தால் மேலேற வேண்டும்! ○

துவளச் செய்தாலும் 'தூய்மையான தமிழ் உணர்வு' சேர்ந்து மணம் கமழ்வதை அந்த மெய்ப்பொருள் உரைகளின் ஒவ்வோர் எழுத்தும் மண்ணில் ''தமிழ்'' உள்ளவரை மக்கள் கண்டு கொண்டே இருப்பார்கள்; களித்துக் கொண்டே இருப்பார்கள்! தங்கள் வாழ்வின் பெருமையை எண்ணிப் பூரிக்கிறேன்; பாராட்டுகிறேன்!

ஏறக்குறைய எட்டாயிரம் பக்கங்கள் நிரம்பும் மெய்ப்பொருள் உரை' விரைந்து பறந்து உலகெலாம் இனிக்க, மணக்க தமிழன்னை உறுதுணை புரிவாளாக!— வாழ்த்துகள் அன்புள்ள,

—அருள்மணி, வெங்காளூர்; 21-

பீடு முழங்கும் இப் பாரே!

—முனைவர். கு. அரசேந்திரன், க.மு.

1. எப்படி மீட்போம் எந்தமிழ் இனத்தை
என்னரும் பாவல ரேறே — எம்
எலும்பின் சதையின் சாறே!
செப்படிக் கலையில் செந்தமிழ் நாட்டார்
சிந்தை மயங்கிய நிலையில்—ஒரு
சிறிது மில்லையே தலையில்!
தப்படி கொண்டே தத்தங் கட்சியைத்
தரையில் நிறுத்தினார் தலைவர்—அவர்
தமிழை வீழ்த்திய புலையர்!
ஒப்படி வேண்டும் உங்களின் தொண்டில்
உருவிடு வீர்கை வாளை—வரும்
உலகும் ஏற்கும்நம் நாளை!

2. மேடையில் நின்று மேனி குலுக்கி
மீசையை முறுக்கிய பேச்சில்—பலர்
மாடிகள் கட்டினர் மூச்சில்!
பாடையின் பிணத்தைப் பந்தலில் வைத்துப்
பதவிக் கழுதனர் பகட்டில்—வெறும்
பணத்தில் மட்டுமே முகட்டில்!
காடைகள் கழுதைகள் கட்டையில் போகக்
காட்டிடு வீரே வழியை — நம்
கடமை துடைக்கட்டும் பழியை!
வாடையில் வறுமையில் வஞ்சகர் தீயினில்
வதங்கிடும் பாவல ரேறே—எம்
வாழ்விலும் சாவிலும் நீரே!

3. நெற்றி வெய்ர்வையில் நித்தமும் மக்கள்
நெஞ்சு ஒடிவதோ நாட்டில்—இனும்
நீட்டி எழுதவேர் ஏட்டில்!
முற்றிய இருள்மன மூடத் தலைவர்
மூலையில் ஒதுங்குவ தென்றோ—இனி
மூச்சு விடுவதும் நன்றோ!
விற்றிடு கின்றனர் வடவரின் காலில்
விறல்தமிழ் மக்களை ஏய்த்து—நாம்
வீழ்த்திடு வோமதைச் சாய்த்து!
கற்றிடு செந்தமிழ்க் கடமைத் தலைவ
களிறென எழுட்டும் இயக்கம்—இதில்
காட்டிட வேண்டாம் தயக்கம்!

4. காசு தேர்த்திட கற்றவர் யாவரும்
காற்றில் பறந்திட நாயாய் — நாம்
கடமை செய்குவோம் தீயாய்!
தூசு துகள்களைத் தொங்கல் மாலையாய்த்
தொத்தி மாடுகள் சூட—உடன்
துரத்து வோமவர் ஓட!

மாசு நெஞ்சரோ மக்கள் தொண்டரென
மன்றில் நின்று வாய் மீட்ட—அவர்
மங்கி யழியகை நீட்டும்!
பேசு செந் தமிழ்ப் பேணி வளர்த்திடும்
பெருமைச் சித்திர னுரே—நும்
பீடு முழங்குமிப் பாரே!

5ஐ கூத்திடு தொழிலாளர் கொள்கைகள் பேசிக்
கொடுங்கோ லரசே படைக்க—நாம்
கொதித்தெழுந் தோமதை உடைக்க!
ஆர்த்திடு மின்னல் அடைமழை யெல்லாம்
ஆர் துணை என்றுகை நீட்டும்—நம்
அடிமைக் கேசெயல் தீட்டும்!
தித்தழ லென்னத் தென்மொழி கொண்டு
தினவுச் சொற்களை வார்க்கும்—நும்
திருக்கை யேபகை தீர்க்கும்!
பார்த்திருப் போமா பாவல ரேறே
பகையை நும்கால்கள் இடற—யாம்
பதைத்தோம் நுமதடி தொட!

6ஐ வடக்குக் கதவினை வலியப் பூட்ட
வாளில் சிலர்தலை உருட்டி—இனி
வவத்திட வேண்டும் மிரட்டி!
துடுக்குப் பார்ப்புத் தொலைந்து போகவே
துமுக்கி ஏந்தவும் வேண்டும்—பெருந்
தூளி கிளம்பட்டும் யாண்டும்!
கொடுக்குத் தேளர் கொள்கையென் றின்னும்
கூறி யடிப்பதோ கொள்ளை—இக்
கொடுமைக் கிதுதான் எல்லை!
எடுக்கக் குறையா எழுத்துச் சுரங்கம்
எவர்க்கும் நிறுவிய தலைவ—நின்
எதிரிகள் சிதறிக் குலைவர்!

சொல்லாய்வறிஞர் அருளி அவர்களின்
அரிய புதிய ஆராய்ச்சிப் படைப்பு!

தென்மொழியின் தொண்டு!

(இதழ் தொடக்கக் காலம் பற்றிய ஒரு மேற்பார்வை)

(தென்மொழி தொடங்கிய 1959-ஆம் ஆண்டில் ஆசிரியர் பாவலலேறு பெருஞ்சித்திரனர் தம் இருபுத்தாறு அகவையில் இருந்த இளமைத் தோற்றப் படம் அட்டையில் மிளிர்கிறது.)

பக்கங்கள்: 90 விலை உருபா. 12.

அறிவன் பதிப்பகம்
'தனித் தமிழ் மனை' 'தமிழூர்'
காளிக்கோயில் தெரு, புதுவை—605009.

சிறையிலிருந்து வந்த சில மடல்கள்!

('ஆசிரியர் கடந்த 26-9-93 அன்று மாலை 'தடா'ச் சிறையிலிருந்து வெளிவந்த பின் அங்கிருந்து பழகிய உள்ளங்கள் சில மிகவும் வருந்தி விடுத்த மடல்கள் இவை. அங்கிருந்தவர்களிடம் ஆசிரியர் கொண்ட தொடர்பையும் அன்புணர்வையும் இவை விளக்குகின்றன. தென்மொழி அன்பர்கள் அவற்றை அறிதல் பொருட்டு இவை இங்கு வெளியிடப் பெறுகின்றன).

1. தங்களின் குணத்தை யாரிடத்திலும் கண்டதில்லை!

மானமிகு பாவலரேறு அய்யா அவர்களுக்கு,

வணக்கம். நான் மற்றும் தோழர்கள், சந்தனத் தலையாளிகள் அனைவரும் நலம். தங்களின் நலத்தையும், அம்மா மற்றும் குடும்பத்தாரின் நலத்தையும் அறிய ஆவல். அனைவருக்கும் எனது அன்பான உசாவலைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

அய்யா, தங்களின் 2-9-93 நாளிட்ட மடல் கிடைத்தது. தங்களிடமிருந்து மடல் வந்துள்ளது என்று அறிந்தவுடன், என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

நீங்கள் எங்களுடன் சிறையில் இருந்த நாட்கள் யாருக்கு எப்படி இருந்ததோ, எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது: என்னையும் குடும்பத்தில் ஒருவன்போல் நினைத்துக் குடும்பச் செய்திகளை கூறியும், சோர்வுற்ற நேரத்தில் அறிவு ஆசான் தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பற்றி எடுத்துரைத்தும், நேர்காணல் சென்று வந்தவுடன்—தம்பி மாரிமுத்து என்று அழைத்து வெளிச்செய்திகளைச் சொல்லியும் மகிழ்வித்தீர்கள். பல கிடைத்தற்கரிய வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைத்ததற்கு எப்படித் தங்களுக்கு நன்றி சொல்வதென்றே தெரியவில்லை; இருந்தாலும் மரபு கருதி என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்கையளவில் தங்களுடன் உரையாடியபோது நான் கேட்ட அய்யங்களுக்கெல்லாம் விடையளித்தும், ஒரே கேள்வியைத் திரும்ப திரும்ப நான் கேட்டபோதும், சினம்கொள்ளாமல் விடையளித்தும், திருக்குறள் உரை எழுதிக் கொண்டிருக்கும் போது, அய்யம் ஏதாவது கேட்டாலும், உரைஎழுதுவதை நிறுத்தி விட்டு அய்யத்தைத் தெளிய வைத்தும் நடந்து கொண்ட குணத்தை நான் யாரிடத்திலும் கண்டதில்லை. சிறையில் தங்களிடம் அதிக உரிமைஎடுத்துக்கொண்டு பேசி(தோழர்கள் அய்யாவின் செல்லப்பிள்ளை என்று என்னை அழைப்பதுண்டு) ஏதாவது தொந்தரவு கொடுத்திருந்தால் அருள்கூர்ந்து மன்னித்தருளவும்.

எங்களின் பொதுச்செயலாளர் மானமிகு. கி. வீரமணி அவர்கள் தாங்கள் பிணையலில் செல்லும் நாளன்று நம்மை நேர்காணல் செய்ய வந்த அவரிடம் தாங்கள் காட்டிய அன்பைக் கண்டு மகிழ்வுற்றேன்.

தாங்கள் இல்லாததால் சந்தனத் தலையாளிகள் கொஞ்சம் சோர்வுற்று இருக்கிறார்கள்; ஓரளவு நாங்கள் அவர்களைத் தேற்றிக் கொண்டிருக்கிறோம்.

மானமிகு கி. வீரமணி அவர்கள் கூறுவதுபோல் "எது நம்மைப் பிரிக்கிறதோ அதைப்பொருட்படுத்தாமல் இருப்போம். எது நம்மை அணைக்கிறதோ அதை விரிவு படுத்துவோம்" எனவே தமிழினம் நலன் கருதி தாங்கள் தொடங்கும் 'தமிழினக் காப்புப் பேரவை'க்கு எங்களின் அன்பான உறுதியான வாழ்த்துகள்!

திருக்குறள் மெய்ப்பொருள் உரை மற்றும் தங்களின் நூல்களை விரைவில் வெளியிட்டு எங்களுக்கும் படிகள் அனுப்பி உதவ வேண்டுகிறேன்;

"பெரும்பணியைச் சுமந்த உடல்;
பெரும் புகழைச் சுமந்த உயிர்;
'பெரியார்' என்னும்
அரும்பெயரைச் சுமந்த நரை;
அழற்கதிரைச் சுமந்தமதி;
அறியாமை மேல்,
இரும்புலக்கை மொத்துதல் போல்
எடுக்காமல் அடித்த அடி;
எரிபோல் பேச்சு!
பெரும்புதுமை; அட்டா இப்
பெரியாரைத் தமிழ் நாடும்
பெற்ற தம்மா!"

எனும் தங்களின் வைர வரிகளுக்கு ஏற்பப் "பெரியார் பணி முடிப்போம்"; தொடர்க உங்கள் பணி! பாசமுடன்

—வா. மாரிமுத்து, நடுவண்சிறை, சென்னை-3.

2. என் விடுதலைக்குப் பின் நான் நுழையும் வாயில் தென்மொழி வாயிலே!

பேரன்பின் தனித்தமிழ் அரிமா, தென்மொழித் தந்தை பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம்.

அய்யா, தூவலுக்கு என் விழி நீரை மையாக்கி எழுதுகின்றேன். சிறையில் எதிர்வரும் காலங்களை எப்படிக் கடத்துவேன் என்ற ஏக்கத்துடன் இருக்கின்றேன். நீங்கள் சென்றபின் சின்னச் சின்ன சிக்கல்கள்கூட நில நடுக்கங்களாக வெடித்து என்னைக் கண்ணீருக்கு சொந்தக்காரன் ஆக்கி விட்டன.

நீங்கள் சிறைக் கதவைக் கடந்து சிறை அலுவல் அறைக்கு வரும்போது, வீரப்பன் வழக்கைச் சார்ந்த எல்லாரும் கண் கலங்கி விட்டார்கள். என்னென்று சொல்வது, அவர்களின் அன்பை! அய்யா, நீங்கள் கொடுத்த மனஉறுதியும் தெம்பும் தான் அவர்களை இன்னும் மலர்ந்த முகங்களாகவே வைத்திருக்கின்றன.

தங்கள் (02-09-93) மடலை கிடைக்கப் பெற்றேன். அய்யா! உங்களின் மடல் வரும்...வரும் என்று காத்திருந்தேன். பள்ளி சென்ற குழந்தை தன் தாயின் திருமுகத்தைத் தொடத் துடிப்பதுபோல'' மேய்ச்சலுக்குச் சென்ற மாடுகள் மாலை வந்ததும் தன் கன்றுகளைக் காண ஆவலோடு ஓடி வருவது போல', என் அய்யாவின் மடலுக்காகக் கதவருகே காத்திருந்தேன். வந்தது மடல், கிட்டியது என் கைக்கு, மாலை வந்ததும் மோடம் போட்டதும் ஆடிடும் மயில் போல, அய்யா! அகமகிழ்வு கொண்டேன்.

மடலை எல்லாருக்கும் படிக்கக் கொடுத்தேன். படித்தும் காட்டினேன். அய்யா, மடல் போட்டாரா என்று ஒவ்வொரு நாளும் வீரப்பன் துணையாளிகள் என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நீங்கள் சென்றதும் [illegible] உடல் நலமே இல்லாமல் போய்விட்டது. உண்மையாகவே அவர் உங்கள் மடல் வந்ததும்தான் சிரித்தே காணப்பட்டார்; நண்பர் செல்லமுத்து, கழராம்பன், நற்குமரன் மற்றும் கண்ணுச்சாமி நலமுடன் இருக்கின்றார்கள்,

பொழில், அண்ணன் குடும்பத்தினர், அக்கா குடும்பத்தினர் சொல்லாய்வறிஞர் அருளி அய்யா, அக்கா, தெள்ளியன், பிறை அக்கா, மற்றும் தென்மொழி அமைச்சர் எல்லாரையும் நலம் உசாவியதாகச் சொல்லுங்கள். எல்லாரும் என்னை உசாவியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அய்யா, சத்தியமங்கலம் திருமண விழாவில் நீங்கள் பேசியது தான் என் நினைவுக்கு வருகின்றது. இந்த நாட்டிலே தொண்டு செய்தவர்கள் என்று எடுத்துக் கொண்டால் ஒருவர் புத்தர்; மற்றவர் தந்தை பெரியார். மற்றவர்கள் எல்லாம் தங்கள் கடமையைச் செய்தவர்களே, செய்கிறவர்களே. சரியாகச் செய்யாதவர்களே. மூன்றாவதாகத் தூய உள்ளம் படைத்துத் தொண்டுள்ளம் கொண்டு, மொழி, இனம் நாடு காத்து வருகின்றவர் தென்மொழித் தந்தை தனித்தமிழ் அரிமா, பாவலரேறு அய்யா அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. 'அன்பும் ஆசிரியத் தொண்டும்' என்று குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். உங்களுக்கு (மொழி, இனம், நாடு) நான் செய்ய வேண்டியது என் கடமை; அக் கடமையையும் என்னால் சரியாகச் செய்ய முடியவில்லையே என்று வருந்தினேன், வருந்திக் கொண்டு இருக்கின்றேன், ஏனென்றால், என்னிடம் செயலும் செயல் திறமையும் இல்லை. குறிப்புணர்ந்து நடக்க முடியவில்லை. பெரும்பாலான நேரங்களில், நாள்களில் உலகியல் நிலையிலேயே இருந்துவிடுகின்றேன். குமுகியல் நிலைக்கு வரவில்லை. உறுதியாக இன்னும் கொஞ்சகாலம் கடமைசெய்ய வாய்ப்புக் கிட்டியிருந்தால் என்னை முழுமையாக உருவாக்கி இருப்பீர்கள்; ஆகி இருப்பேன், வளர்த்திருப்பீர்கள்; வளர்ந்திருப்பேன்! அய்யா உங்களுக்கென்று உலவிவர படகுக் கார் வைக்கச் சொல்லவில்லை; குடி இருக்க மாடமாளிகை கட்டச் சொல்லவில்லை; பொதுவாக

உங்களுக்கு வரும் கடிதம்கூட உங்களுக்கு என்று சொந்தமாக்கிக் கொள்வதில்லையே. என் மொழி, என் மக்கள், என் நாடு என்று கருதியல்லவா படிக்கக் கொடுத்து விடுகின்றீர்கள். புத்தரும், தந்தை பெரியாரும்கூட இப்படி இருந்திருப்பார்களா என்று என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

அய்யா, என்றன் விடுதலைக்குப் பின்னர், சிறை வாயில் விட்டு வெளிவந்ததும், நான் நுழையப் போகும் வாயில் தென்மொழி 'வாயில்' தான்! என்னை ஆக்கியதும் தென்மொழி; அழிப்பதும் தென்மொழிதான்! என்னை நான் ஒப்படைத்து விட்டேன். ஏனோ ஏற்க மறுக்கிறீர். என்றன் வாழ்வில் தென்மொழி படித்துச் சாக வேண்டும்; என்றன் சாம்பல் தென்மொழி மணந்து வேக வேண்டும்;

அண்ணனுக்கு மடல் எழுதியுள்ளேன். தற்போது ஏதும் பிணையல் போடவேண்டாம். இப்பொழுது ஆகிவரும் சூழ்நிலை' களைப் பார்த்துக்கொண்டு முயற்சி செய்வோம். இது என் கருத்து; நீங்கள் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவேன். அனிபா அவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்கின்றேன்;

அய்யா! நான் வாழ்ந்து முடிந்த ஆண்டுகளில் ஏழுமாதங்கள் தான் குறிப்பிடத்தக்கவை. எனக்கு இரட்டைப் பணி கிடையாது, ஒரே வருத்தம், தங்களோடு ஒரு நாளேனும் அறையில் இருந்திருக்கவேண்டும்; பிணையல் கிடைத்த அன்று, எப்படியும் 7 மணி ஆகும். அன்றேனும் உங்களோடு அடைப்பாகி விடலாம் என்று இருந்தேன்; அதுவும் கிட்டவில்லை.

கி. ஆறுமுகம், நடுவண் சிறை: சென்னை-3.

3. சிறையில் பெரியார் பிறந்த நாள் விழா!

பேரன்பிற்கும், மதிப்புக்கும் உரிய அய்யா பாவலரேறு அவர்களுக்கு எமது நெஞ்சு நிறைந்த வணக்கம்; தங்களின் 02-09-93ம் நாளிட்ட மடல் கிடைக்கப்பெற்றேன்; மிக்க மகிழ்ச்சி.

இங்கு தோழர்கள் அனைவரும் நலம்; தங்களின் உடல் நலத்தை நன்கு கவனித்துப் கொள்ளுங்கள். இன்றைய சூழலில் இந்திய அரசின் பார்ப்பன வல்லாளுமை 'இந்தியைத் திணிப்பது'' இட ஒதுக்கீட்டை ஒழிப்பது' காவிரிச் சிக்கலில் தமிழினத்திற்குக் கேடு விளைவிப்பது இவை போன்ற கேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தாங்கள் குறிப்பிட்டிருப்பதுபோல் 'தமிழினக் காப்புப் பேரியக்கம்' கட்டாயம் தேவை.

வரும் செப்டம்பர் 17-ஆம் நாளன்று அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் 115-ஆம் ஆண்டுப் பிறந்த நாள் விழாவை மிகச் சிறப்பாகச் சிறையினுள் கொண்டாட திட்டமிட்டுள்ளோம். தங்களின் உடல் நலத்தை நன்கு பேணுங்கள். நன்றி வணக்கம்; தங்களின் அன்பு நிறைந்த

— து: நன்முகம், நடுவண்சிறை, சென்னை-3.

4. நினைத்துக் கொண்டே இருக்கின்றேன்!

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த அய்யா அவர்களுக்கு அனீபா எழுதியது. நீங்கள் இங்கிருந்து சென்றதிலிருந்து நினைத்துக் கொண்டே இருக்கின்றேன். என் மகன் வந்து சென்றதிலிருந்து இதுவரை கடிதம் வரவில்லை. இந்தக் கடிதம் கண்டவுடன் என் மருமகனுக்கு ஊட்டி முகவரிக்குத் முகமத் காசிம் கஸ்தூரி பவான் ஒட்டல் ஊட்டி P.O. ஊட்டி, என்ற முகவரிக்குத் தொலைவரி கொடுத்து வரச் சொல்லவும்; உடல்நிலை தாழ்வாக உள்ளது; உங்கள் முகவரியை அனுப்பி உங்களை வந்து பார்க்க ஏற்பாடு செய்து அனுப்புங்கள். எனக்கு மூன்று நாள்களாகக் காய்ச்சல்;

—அனீபா, நடுவண் சிறை, சென்னை-3;

5. எங்களை விடுவிக்க ஏற்பாடு செய்யுங்கள்!

பேரன்புடைய அய்யா அவர்களுக்குச் சின்னப்பொன்னுன் மற்றும் அப்பு எழுதும் கடிதம். நாங்கள் எல்லாரும் நலமாக இருக்கின்றோம்; அதேபோல் நீங்களும் நலமாக இருக்க வேண்டுகிறோம். நீங்கள் ஆறுமுகத்திற்குப் போட்ட கடிதத்தைப் படித்துப் பார்த்தோம்; மிக்க மகிழ்வு கொண்டோம். எங்களோடு இருக்கும் சின்னச்சாமி, கோபால், மயில்சாமி மற்றும் அனீபா ஆகியோரும் நலமாக இருக்கின்றோம். நீங்கள் வெளியில் வந்ததும் அன்பர்கள் வருகை மிக அதிகமாக இருப்பதால் கடந்த ஏழு மாதப் பணிகளை எல்லாம் செய்யவேண்டி இருப்பதால், ஓய்வின்றியும் உறக்கமின்றியும் இருப்பதாகவும் அறிந்தோம்; அதனுல் எங்கள் வழக்குத் தொடர்பாக யாரையும் சந்தித்திருக்க மாட்டீர்கள் என்றே கருதுகின்றோம்; அய்யா, நீங்கள் தக்க அதிகாரிகளிடமோ அல்லது அரசிடமோ பேசி எங்களுக்கு ஒரு நல்ல முடிவைத் தேடித் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் தென்பாக இருக்கின்றோம்: கூடிய விரைவில் எங்களுக்கு நீங்கள் பிணையல் கிடைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள்; அய்யா, ஒருவர்தாம் எங்களின் நிலைமைகளை முழுக்கத் தெரிந்தவர்கள். மற்றபடி யாருக்கும் எங்களைப் பற்றியோ, எங்களின் நிலைகளைப் பற்றியோ தெரிய வாய்ப்பில்லை: உண்மையாகவே நாங்கள் சிறைக்கு வரும்போது மன வருத்தத்தோடுதான் வந்தோம். ஆனல் சிறையில் உங்களைக் கண்டதும் வருத்தங்கள் ஓடிப்போயின. தங்களால்தாம் எங்களுக்குத் தக்க முடிவு கிடைக்கும் என வருத்தமின்றி இருக்கின்றோம். அய்யா அவ்வப்போது நிலைமைகளைக் குறித்து எங்களுக்கு கடிதம் போடுங்கள்; அக் கடிதங்கள் தாம் எங்களைச் சிறையில் உடல் நலத்தோடு வாழ வைக்கும். நீங்கள்தான் எங்களை வந்து பார்க்க முடியாது. வழக்கறிஞர் அவர்களை அனுப்பி எங்களைப் பார்க்க ஏற்பாடு செய்யவும்; அன்புடனும் தாழ்மையுடனும்,

—சின்னப்பொன்னுன், நடுவண் சிறை, சென்னை-3;

சிறையிலேயே கிடக்கட்டும்!

— இரா. திருமாவளவன்.

○ பதவிக்கோ பணத்திற்கோ
பகட்டான வாழ்வுக்கோ — அவர்
படியேறி எவனிடமும் சென்றதில்லை! — சேவகமாய்ப்
பல்லிளித்துக் கையேந்தி நின்றதில்லை! — அவரைப்
பணியவைக்க முயன்றவனும் வென்றதில்லை!

○ தன்காலை ஒருவேளை
தலைகுனிந்து பார்த்திருப்பார்! — மாற்றான் முன்
தவறிக்கூட அவர் தலையோ தாழ்ந்ததில்லை! — கல்
தடுக்கியேனும் பிறன்காலில் வீழ்ந்ததில்லை! — நொடிப்
பொழுதும்
தரம்கெட்டு வாழ்வோமென வாழ்ந்ததில்லை!

○ அறுபதாம் அகவையிலும்
அரிமாவின் மிடுக்கு நடை! — எழுத்தினிலே
அடக்குமுறைக் கஞ்சாத துடுக்கு நடை! — அவர்மீது
ஆயிரம்முறை பாயட்டுமே 'தடா' தடை! — உறுதிமிக்க
அவரைஎன்ன செய்துவிடும் அரசின் படை!

○ கைவிலங்கைக் கண்டு அவர்
கண்கலங்கி நடுநடுங்கி — தாம்
கண்டுரைத்த கொள்கையினை மறுத்தாரா? — விடுதலைக்
கருத்தியலே வேண்டாமென வெறுத்தாரா? — வம்புள்ள
கடல்கடந்த தமிழுறவை அறுத்தாரா?

○ 'தமிழகத்தின் விடுதலைதான்
தமிழினத்தை வாழவைக்கும்' — என்ற
தம்கருத்தை விதைகளாகத் தூவுகின்றார்! — புதிய
தமிழ்நிலத்தின் விடியலுக்காய்க் கூவுகின்றார்! — ஒட்டு
மொத்தத்
தமிழர்களைக் களங்குதிக்க ஏவுகின்றார்!

○ சிறையில் பெருஞ் சித்திரனார்
சிக்குண்டே கிடக்கட்டும்! — அவரின்
செந்தமிழ்ப் புலமையென்ன சிதைந்தா போகும்? —
இனமீட்சி
சிந்தனையும் சிறையிருட்டில் புதைந்தா போகும்? —
பாவலரின்
சிந்தைத்தீயில் இனப்பகைதான் வெந்தே போகும்!

நன்றி; "உழைக்கும் மக்கள் தமிழகம்" (ஆக-செப் '93)

நன்றி! நன்றி!! நன்றி!!!

1) என்மேல் அரசு சுமத்திய 'தடா' வழக்குக் குற்றச்சாட்டை வழக்குமன்றத்தில் மிகத் தீவிரமாக எதிர்த்தும் வழக்காடியும், பல்வேறு காரணங்களைக் காட்டி, என்னைப் பிணையலில் விடுவிக்க வேண்டிய ஞாயத்தை நடுவர்க்கு எடுத்துக் காட்டியும், மூன்று முறை தம் அறிவுத்திறனாலும், தருக்கத் திறமையினாலும் போராடி என்னைப் பிணையலில் வெளிக் கொணர்ந்த நம் கொள்கை உயர்நெறிமன்ற வழக்கறிஞர் திரு.க.கலைமணி. க.மு;ச.இ. அவர்களுக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) நான் சிறைக்குள்ளிருந்தபொழுது, என் தகுதிநோக்கி என்னைக் கட்டுப்பாடின்றி விடுதலை செய்யச் சொல்லி, 'மக்கள் வாழ்வுரிமைக் கழகம்' (P.U.C.L.) கொண்ட முயற்சியால், முன்னாள் உச்சநெறி மன்ற நடுவர் மாண்புமிகு வி.ஆர்.கிருட்டிண (அய்ய)ர், பம்பாய் உயரற மன்ற நடுவர் மாண்புமிகு வி.எம். தார்குண்டே, நடுநிலை அரசியல் திறனாய்வாளர் உயர்திரு.குல்தீப் நையார், ஆந்திர விடுதலை இயக்கத் தலைவர் பாலகோபால், தமிழ்நாடு மாநில மக்கள் உரிமைக்கழகம் செயலர் தா.மனோகரன் ஆகியோர் உள்ளிட்ட அறிஞர்கள், பேராசிரியர்கள், முதலிய நூற்றுக்கும் மேற்பட்ட அறிவாளர்கள், முதலமைச்சர் செயலலிதாவிற்கு நேரிடையாக மடல்கள் வழி கோரிக்கை விடுத்தனர்.

அதேபோல், தமிழ்நாடு புரட்சிகர இளைஞர் முன்னணியினர்; நாடு தழுவிய அளவில் பல்லாயிரக்கணக்கான சுவரொட்டிகளை ஒட்டியும், இலக்கக் கணக்காண அறிக்கைகளை அச்சிட்டுப் பரப்பியும், நூற்றுக்கணக்கான மாவட்ட மாநாடுகள், அரங்கக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், பேரணிகள் நடத்தியும் பரவலாகக் கருத்துரையாற்றி, என்னை உடனே விடுதலை செய்யச் சொல்லிக் கோரிக்கைகளை முன் வைத்துப் போராடினர். இவர்களுக்கும், இவற்றுடன் இணைந்து ஒத்துழைத்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழர் தேசிய இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழகத் தமிழாசிரியர் கழகம். (தலைவர். புலவர். கி.த. பச்சையப்பன்) தமிழ்நாடு மாணவர் பேரவை, விடுதலைக் குயில்கள், திலீபன் மன்றம், கருநாடகத் தமிழர் பேரவை, அறிவியக்கப் பேரவை, கலைநகர் தமிழ்ச் சங்கம், மக்கள் குடியுரிமைச் சங்கம், முற்போக்கு இளைஞரணி, இ.பொ.க.(மா.லெ.) செங்கொடி, நேபாளப் பொதுவுடைமைக் கட்சி, பகுத்தறிவாளர் கழகம், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி, திராவிடர் கழகம் (இரா), பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை, தமிழ்த் தேசிய மனித உரிமைக் கழகம், மற்றும், இ.கா.இ.மு.க., சனதா தளம், இந்தியக் குடியரசு கட்சி ஆகிய இயக்கங்களுக்கும், தனிப்பட்ட முறையில் அரசுக்குப் பல முறைகள் மடல்கள் எழுதிய பேராசிரியர் சாலை-இளந்திரையன், சாலினி-

இளந்திரையன் ஆகியோர்க்கும் என் நெஞ்சு உவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் என் சிறையிருப்புச் செய்திகளை வெளியிட்டும் என்னை வெளியில் விடவேண்டுமென்று கோரியும் எழுதிய 'இனி', தமிழர் கண்ணோட்டம், அரங்கேற்றம், விடுதலை, 'எழுகதிர்', திராவிடன், மக்கள் தமிழகம், அன்றில் முதலிய இதழ்களுக்கும், தலைவர்கள் மருத்துவர் ச. இராமதாசு, பேரா. தீரன் அறிஞர்கள் பழ. நெடுமாறன், திரைப்பட இயக்குநர் மன்சூர் அலிகான், திரைப்பட நடிகர் டி. இராசேந்தர், மணியரசன், தியாகு, பி.வி. பக்தவத்சலம், புலவர் கலியபெருமாள், சொல்லாய்வறிஞர் ப. அருளி, புலவர் இறைக்குருவனார், சுப. வீரபாண்டியன், புலவர் அரசமாணிக்கனார், முதலியவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3) அடுத்து, நான் கடந்த ஏழுமாதங்களாகச் சிறையிருந்த பொழுது, என்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு, என வழக்கு நடப்பதற்கு பேருதவியாகவும் பெருந்துணையாகவும் இருந்த, இருக்கின்ற, அனைத்து நெஞ்சங்கட்கும், குறிப்பாகவும், சிறப்பாகவும் உயர் திருவாளர்கள் அரிமா வளங்கோ, பிரான்சு, அருள்மணி, வெங்காலூர், சா. சந்திரேசன், சென்னை-1, பாட்டாளி மக்கள் கட்சி அன்பர்கள் சென்னை-18, மாணவர் நகலகம் சென்னை 20, புலவர் அரசமாணிக்கனார் ஈரோடு, கா. செ. தமிழடியான், திண்டுக்கல், தெய்வசிகாமணி, திருக்கழுக்குன்றம், ஆகியோர்க்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4) இனி, நான் சிறையிருந்த பொழுது, தென்மொழி அச்சகம் தொடர்ந்து நடப்பதற்கும் இதழ்கள் வெளிவருவதற்கும், அடிக்கடி காவலர்கள் தலையீடுகள் இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் அஞ்சாமல் அலுவலக அச்சகப் பணியாற்றிய, அமைச்சர் திருவாட்டி சு. குணவழகி, கோப்பாளர்கள் திருவாட்டி ஆ. சாந்தி, செல்வி. கு. கலா ஆகியோர்க்கும், என் அன்புப் பெயரன் இ. செம்மல் ஆகியோர்க்கும், அச்சுப் படிகளைத் திருத்தம் செய்தும், ஆசிரியவுரைகளையும் அட்டைப் பாடல்களையும் அவ்வப்பொழுது எழுதிக் கொடுத்தும் உதவிய புலவர், திருக்குறள் மணி. இறைக்குருவனார் அவர்களுக்கும் என் உளங்கனிந்த உழுவல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ⊙

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

பாருக்குள்ளே நல்ல நாடு பாரீர்!

புலவர். ப. அறிவுடைநம்பி, மூலனூர்.

'பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு' என்று சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே, பாரதி பாடினார். ஆனால் அன்று அவர் எதை வைத்து நல்ல நாடு என்று பாடினார் என்பது புரியவில்லை. இன்றும் அதை முழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றும் இந்தப் பாரதநாடு எந்த வகையில் பாரில் சிறந்து விளங்குகிறது என்று தெரியவில்லை. அ'து எதில்—எந்தத் துறையில் சிறந்து விளங்குகிறது? நல்ல நாடாக விளங்குகிறது? என்பது அந்தப் பாவலருக்கே வெளிச்சம்.

இன்று இந்த நாடு விடுதலை பெற்று அரை நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது எதில் முன்னேறாவிட்டாலும். அடக்கு முறைகளிலும், ஆள் தூக்கிச் சட்டங்கள் இயற்றுவதிலும், அறிஞர்களைச் சிறைப் பிடிப்பதிலும், பொதுப் பணத்தைக் கொள்ளையடிப்பதிலும், குடியாட்சியைப் பகடி(கேலி)க் குரிய தாக்குவதிலும் பதவியில் இருப்பவர்கள் தங்கள் பதவியைக் காத்துக் கொள்ள எத்தகைய இழி செயல்களையும் சிறிதும் நாணமின்றிச் செய்வதிலும், பொருட் பற்று, பண ஆசை, பதவிப்-பித்து இவற்றை பெற்றபின் தக்க வைத்துக்கொள்ள; எத்தகைய இழி செயலையும், நீதிக்கு மாறான செயலையும், பொதுநலக் கேடான செயலையும் வெட்க, மானமின்றிச் செய்வது, செய்தபின் அது சரியானதே என நிலைநாட்டுவது, ஆகிய வினைப்பாடுகள் மிக மிக முன்னேறி விட்டன. உலகில் பிற நாடுகளில் இல்லாத அளவு வளர்ந்துவிட்டன. இது மறுக்க முடியாத உண்மை. இப்படியெல்லாம் வரப் போகிறது என்பதை உணர்ந்துதான் இந்த நாடு பாருக்குள்ளே நல்ல நாடு, என வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடியிருப்பாரோ?

இப்பொழுது, அதோடு இன்னுமொரு சிறப்பும் சேர்ந்திருக்-கிறது. அதுதான் குண்டு வெடிப்பு வினைப்பாடு. தில்லியில் தொடங்கி, பம்பாயில் வளர்ந்து, கல்கத்தாவில் கால் பரப்பி, இப்பொழுது சென்னைக்கும் பரவி விட்டது. அமைதிப் பூங்கா-வாகிய தமிழகத்தில், முன்பு கொலை, கொள்ளை, கற்பழிப்பு" ஊர்வலம், உண்ணா நோன்பு, வெற்றி விழாக்கள் (இந்த வெற்றி-விழா, யாரை யார் வெற்றி கொண்டதற்கு, அல்லது எதில் வெற்றி, எதற்கு வெற்றி, இது யாருக்கும் புரியாத, அதை நடத்துபவர்களுக்கே தெரியாத செய்தி?) இப்படி எத்தனையோ முன்னேற்றத் திட்டங்களில் இப்பொழுது வெடிகுண்டு விழாவும் சேர்ந்து கொண்டது. இ'து எங்கே வெடித்தது என்பதுதான் முகாமை. இந்தக் கொலைகாரக் கும்பல்கள் அயோத்தியில் இடித்தது, இங்கே அவர்களுக்குரியது வெடிக்கிறது. இதற்கும் அதற்கும், தொடர்பு உண்டோ இல்லையோ, யாமறியோம்; ஆனால், தமிழ்நாட்டில் ஒரு சொல்லும் உண்டு; "வினை விதைத்த-வன் வினை அறுப்பான்" என்று; அ'து உண்மையாகிவிட்டது.

தமிழ் நிலம் இதுவரை கொலை கொண்ட மதவெறிக் கும்பல்களின் வேட்டைக் காடாக ஆகாமல் இருந்தது: அந்நிலை மாற்றப்பட்டு விடுமோ என்று அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது:

வெடி ஏற்பட்ட பின்னர் நடந்துள்ள விளைப்பாடுகள், நாம் நன்கு சிந்திக்க வேண்டியவை: இதை இந்த மடத்தமிழர் எவ்வளவுபேர் உணர்வார்கள்? தமிழகத்தின் உயிர் நாடியான காவிரி வறண்டு கொண்டிருக்கிறது: கருநாடகத் தமிழன் சாகடிக்கப்படுகிறான், சொத்துகள் சூறையாடப்படுகின்றன, பம்பாயில் தமிழன் அடிபடுகிறான்; குடிநீர்ப் பஞ்சம்; வறட்சி; கரை புரண்டோடும் ஊழல்! பல பொதுநலன் நாடி உழைக்கும் அறிஞர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் இளைஞர்கள் பலர் தடாவில் சிறையில் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். இவையெல்லாம் ஐந்துகோடிக்கும் மேலான தமிழ் மக்கள் தொடர்பான சிக்கல்கள். இதுபற்றியெல்லாம் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை: ஈழ மண்ணில் ஒவ்வொரு நாளும் தமிழினம் சிதைக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட முகாமையான செய்திகளைத் தமிழர்கள் கண்டு கொள்வதே இல்லை: தொலைக்காட்சி, வானொலிகள் அக்கறை காட்டுவதில்லை: தமிழறிமா பாவலரேறு சிறை வைக்கப்பட்டுள்ள செய்தி எந்தப் பார்ப்பனத் தாளிலும் வருவதில்லை.

ஒரு கட்சித்தலைவர் கூறுகிறார்: 'வெடித்த கட்டிடத்திலேயே வெடிகுண்டு இருந்திருக்கலாம் என்று: அதை யாரும் கண்டு கொள்ளவில்லை: ஆனால் இந்தக் குண்டு வெடிப்பால் ஏதோ பேரழிவு ஏற்பட்டுவிட்டதைப் போல, நடுவணமைச்சர் விரைகிறார்; கட்சித் தலைவர்கள் பறந்து வருகிறார்கள். முதலமைச்சர் தமது தேர்தல் பரப்புரையைக் கூடத் தொடராமல் தலைநகர் விரைகிறார். ஆளுநர் விரைகிறார். வானொலி, செய்தித்தாள்கள் ஆகிய அனைத்தும் இதே செய்திதான்: இன்னும் சொன்னால் தலைமையமைச்சர் கூடத் தனிக் கவனம் செலுத்துகிறார் இவ் வெடிப்புப் பற்றி: அதில் இன்னும் மனத்துயரம் என்னவென்றால் அண்மைக் காலம் வரை அரசால் தடை செய்யப்பட்டு, அறமன்றத்தால் தடை நீக்கம் செய்யப்பட்ட ஓர் அமைப்பின் அலுவலகம்தான் வெடி வைக்கப்பட்ட இடம்; அதற்குத்தான் இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்! அதற்கு என்ன காரணம்? அங்கேதான் மூலமே அடங்கியிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அடிமைகள் இதை உணர்வார்களா? தில்லியின் அடிவருடிகள் இதை உணர்வார்களா? பதவிப் பித்தர்கள் இதை அறிவார்களா?

காவிரிச் சிக்கலைக் கண்டு கொள்ளவே மறுக்கின்ற ஒரு கட்சி குடிநீருக்காகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடத்துகிறது! இதற்கும் நாலுபேர் ஆதரவு! இவர்கள் எல்லாம் மிக நல்லோர்; பொதுநலத்தொண்டர்கள்; ஆனால் உண்மையான பொதுநலத் தொண்டர் தடாவில் சிறையில் அடைக்கப்படுகிறார்: அவரைப்

பிணையலில் கூட வெளிவிட அரசு மறுக்கிறது; நரித்தனமான வர்கள் இடத்துக்கு ஏற்ப நிறமாறுபவர்கள், பொய்யையே வாழ்வாகக் கொண்டவர்கள் தலைவர்கள்; உண்மைத் தொண்டர்கள் தடாச் சிறையாளிகள்.

முதல்வர் வெடிக்கப்பட்ட கட்டிடத்தைக் கட்டிக் கொடுப்பதாகக் கூறுகிறார். அவரது சொந்தப் பணத்திலா, அல்லது அரசு பணத்திலா என்பது தெரியவில்லை; அரசுப் பணமானால், தமிழக மக்களால் ஆட்சிக் கட்டில் ஏறிய புரட்சிச் செல்வியவர்கள், தமிழர் நலன் நாடும், தமிழின மீட்சிக்காகப் பாடுபடும் எத்தனையோ அமைப்புகள் அறிஞர்கள் புரட்சிச் செல்வியின் ஆட்சியால் தாக்கம் அடைந்துள்ளனர், அவர்களுக்கும் உதவி செய்ய முற்படுவாரா? உண்ணு நோன்பின்போது, "நான் எந்த நிலைக்கு ஆளானாலும் கவலையில்லை. தமிழ் மக்கள் தொல்லைப் படுவதைத் தாங்கிக் கொள்ள முடியாது! என்று கூறிய தாயுள்ளத்தைப் பாராட்டுவோம். ஆனால் அதே தாயுள்ளம்! தமிழர் நலனுக்காகப் பாடுபடும் அறிஞர்களை ஏன் தடாவில் உள்ளே தள்ள வேண்டும்? நேற்று, அரசுக் கட்டில் ஏறிய பின்னர் தமிழர் பால் ஏற்பட்டுள்ள தாயுள்ளம், வாழ்நாளெல்லாம் தமிழினத்திற்கும், தமிழ் மொழிக்கும் பாடுபடும் அறிஞர்களைத் தடாவில் தள்ளியதேன்? தமிழ் பற்றிப் பேசுபவர்களைப் புறக்கணிப்பதேன்? தங்கள் தாய் மண்ணில் இனக் கொலைகள் மிகுந்து போர்க்களமாக மாறிவிட்டபடியால், வாழ வழியின்றி உயிரைக் காத்துக் கொள்ள, குழந்தை குட்டிகளோடு வாழ்க்கை ஏந்துகள் அனைத்தையும் இழந்து தமது இன மக்கள் வாழும் பகுதி, நீண்ட நாளைய இனத்தாலும் மொழியாலும், பண்பாட்டாலும் தொடர்புடைய பகுதி, மொழியால் ஒன்றுபட்ட பகுதி என எண்ணி ஈழ மண்ணியிலிருந்து ஏதிலிகளாகத் தமிழகம் வந்த ஈழமக்களைக் கடலில் தள்ளிக் கொல்வதற்குப் பகரமாகக் கொலைக்களமாக மாறிவிட்ட ஈழத்திற்கே திருப்பியனுப்பி, அவர்களைச் சாகடிக்கத் துடிப்பது எந்த வகையிலும் தொடர்பில்லாத உலக அமைப்புகள் 'ஈழத்தில் மக்கள் உயிருக்குப் பாதுகாப்பில்லை- அங்கே அனுப்பக் கூடாது என அறிவிக்கின்றனர்; ஆனால் தமிழக ஆட்சிப் பீடத்தில் இருக்கும் இத் தாயுள்ளம் ஏன் இரக்கம் காட்ட மறுக்கிறது? அது மட்டுமா? இன்று இந்திய நாட்டில், பல இலக்கக்கணக்கான ஏதிலிகள் உள்ளனர்: காசுமீரிலிருந்து வந்தவர்கள், வங்காளத் தேசத்திலிருந்து வந்தவர்கள், வடகிழக்கு மாநிலங்களிலிருந்து குடிபெயர்ந்தோர் என இப்படி ஏராளமானோர் இருக்கின்றனர்; அங்கெல்லாம் கெடுபிடி கிடையாது; அவர்களெல்லாம் இரக்கத்துடன் நடத்தப்படுகின்றனர்; ஈழமக்கள் நிலையில் மட்டும் ஏன் இந்த ஓரவஞ்சனை? அவர்கள் தமிழர்கள் என்பதாலா?

தமிழர்களிடம் ஒற்றுமை இல்லை; இன, மொழி, நலன் பேணும் பொது நோக்கம் இல்லை; அவர்கள் தங்கள் வயிறு நிறைந்தால் எதையும் நினையார்; தங்கள் நலனுக்கு என்றால் எதையும் இழக்கச் செய்வர்; தன்மான உணர்வற்றவர்கள்.

தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் அறியாமை மிக்கவர்கள் என்பதாலா? ஏனென்றால் உலகில் தன் இனத்தைத், தானே அழித்துக்கொள்வதில் தமிழினத்தைவிட வேறு இனம் இருக்கஇயலாது. வரலாறு காட்டும் உண்மை இது. அதனால்தான் தன் இருப்பிடத்திலேயே தமிழன் மற்ற இனத்தவர்களால் கிள்ளுக்கீரையாக, புழுப்பூச்சிகளிலும் இழிவாக நடத்தப்படுகிறான்; இதை எத்தனைத் தமிழர்கள் உணர்கிறார்கள். வெறும் ஒப்போலை பொறுக்கிகளால் இந்நிலை மாறப் போகிறதா? இன்றைய பதவி விரும்பிகள் மாற்றப்போகிறார்களா? இன்று அறிஞர்களாகச் சொல்லிக்கொள்ளும் வயிறு நிரப்பிகளால் முன்னேற்றம் ஏற்படப் போகிறதா? இப்படியே அழிய வேண்டிய அவல நிலை தானா? பெருஞ்சித்திரனார் போல் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இன நலன் பேணுவோராக, மொழி நலன் காப்போராக இருந்தாலும், தந்நலம் தலைவிரித்தாடும் இன்றைய உலகில் அவர்களது பேச்சு எடுபடுவதில்லை. அவர்களை ஆதரிப்போர், துணைநிற்போர் சிலராகவே உள்ளனர். அவர்களும் அச்சுறுத்தப்படுகின்றனர்; அச் சிலரிலும் பெரும்பாலோர் அவ்வெதிர்ப்பை எதிர்கொள்ள இயலாதவர்களாகவே உள்ளனர். இந்த மக்கள் மந்தைகள் அரசியல் நடிகர்களின் கைப்பாவைகளாகவே இருக்கின்றனர். நன்கு சிந்தனையுடன், பகுத்தறிவுடன் செயல்படுவோர் மிகச் சிலராகவே உள்ளனர்.

அறிவின் ஊற்றுக்கண்ணாக விளங்குவது கல்விக் கூடங்களே; ஆனால் இன்று கல்விக் கூடங்களெல்லாம் வணிக நிலையங்களாக மாறி விட்டன. அதில் பணியாற்றும் ஆசிரியர்கள், தங்கள் ஊதியம், கூட்டணி அமைப்புகள் இவை தவிர வேறு எதையும் அறியாதவர்களாக மாறிவிட்டனர்; இவர்களிடம் நாடு, மொழி, இனம், மக்கள் என்ற உணர்வே கிடையாது. அரசியல் அரம்பர்களைவிடக் கீழானவர்களாக ஆகிவிட்டனர். இவர்களது வாழ்க்கைத் தரம் எவ்வளவு மேலானதாக இருக்கிறது. ஆனால் இவர்களைவிடத் தகுதி வாய்ந்தவர்கள், கற்ற எவ்வளவு பேர், வறுமையில் வாடுகின்றனர் என்பதை மறந்து. இவர்களது உரிமை அளவுக்கு மீறிவிட்டது; பொறுப்பும் கடமையுணர்வும் சுழியமாக மாறிவிட்டது. அரசு ஊழியர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். மாந்தப் பண்பு என்பதே வற்றி, தந்நலப் பேய்களாக மாறிவிட்டனர்; இப்படி ஏழை எளியவர்களையெல்லாம் கசக்கிப் பிழிந்து கறக்கின்ற கையூட்டுப் பொருளை என்ன செய்கின்றனர்? குடி, கூத்து, சூது இவற்றில் தானே தொலைக்கின்றனர். இவையனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது இன்றைய அரசியல், ஆட்சிமுறை, கல்விமுறை. பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் நிறைந்துள்ள எத்த நாடுதான் உருப்படப் போகிறது?

இவர்கள் எல்லாம் திருவள்ளுவரின் அற மொழிகளை அறிவார்களா? அப்படி அறிந்தவர்கள், ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருந்தால் இன்றைய அவல நிலை தோன்றியிருக்குமா? தெருக் கூட்டும் தொழிலாளிக்குக் கூடத் தகுதிகள் சில வேண்டும்; ஆனால்,

மிகப் பெரும் பொறுப்புகளை உடைய ஆட்சியாளர்களாக வருபவர்களுக்கு ஏதாவது தகுதிகள் உண்டா இன்று? தனக்கு அறிவில்லையானால் அறிவுடையோர் கூறுவதைக் கேட்கின்ற தகுதியாவது இருக்கவேண்டும். ஆட்சி பீடம் ஏறிய பின்னர் தாங்களே அனைத்தும் அறிந்தவர்கள் என்ற அரம்பத்தனம், அகம்பாவம் தலையைக் கலக்க வைத்துவிடுகிறது. அதன் விளைவு, ஆட்சியாகிய பூமாலை ஆட்சியாளர்களாகிய குரங்கிடம் கிடைத்த கதையாகி விடுகிறது. அதன் பயன் மக்கள் மாக்கள் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். திருவள்ளுவர் பிறந்த மண்ணில் பிறந்து, அவர் எழுதிய மொழியைத் தாய்மொழியாக உடையவர்களுக்காவது அவரின் அரசியல் அறிவு வேண்டாமா? சிறிதளவேனும் அதைப் பெற்றிருந்தால் இந்நிலை தோன்றியிருக்குமா? ஆட்சிப் பொறுப்பு என்பது பெருமை வாய்ந்த சிறப்பிற்குரிய பொறுப்பாகும். அதற்குச் சிறிதும் தகுதியில்லாதவர்களெல்லாம் வருவதால்தான் இந்நிலை. அதனால்தான் அறிஞர்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள்; சிறைப்பிடிக்கப்படுகிறார்கள். அடா! மானமிழந்த இழிவுத் தமிழனே! உனக்குச் சொந்த அறிவு இல்லையானால் மற்றவர்களைப் பார்த்த பின்னராவது, அறிவு வர வேண்டாமா? மான உணர்வு தோன்ற வேண்டாமா? இனம் போன்று இனமல்லாதவர்களாக இருக்கிறோமேயென்ற எண்ணம் ஏற்பட வேண்டாமா? பழைய வரலாற்றை மறந்து போனாயா? சென்னையில் குண்டு வெடித்தவுடன் எங்கெங்கெல்லாமிருந்தோ கூக்குரல் எழுகிறது. உன்னிலேயே எவ்வளவு பேர் கூக்குரல் இடுகிறார்கள். ஆனால், உன் இனம் அழிக்கப்படுகிறபோது, சிதைக்கப்படுகிறபோது இங்குள்ள நரிக் கும்பல்கள் மூச்சு விட்டனவா? ஆனால் நீ ஏன் ஊளையிடுகிறாய்?

தமிழனைத் தாழ்த்தவும் வீழ்த்தவும் இன்னொரு தமிழன் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறான். தமிழனின் மீட்சியென்று வரும்போது எவனும் முன் வருவதில்லை. முன் வருபவர்களுக்குத் துணை போவதற்குப் பகரமாக அவர்களை வீழ்த்தவே முற்படுகிறான். பதவிக்காகப் பணத்திற்காகப் பல்லிளித்து நிற்கிறாயே வெட்கமில்லையா? அப்படி இனத்தை வீழ்த்தி மொழியைக் காட்டிக் கொடுத்து, பண்பாட்டைப் பலி கொடுத்து, ஆண்மையை அடகு வைத்து, மாற்றான் காலில் மண்டியிட்டுக் கிடக்கும் அடையாளக் கோடரிக் காம்பாய், குலக் கேடனாய், பதவியைப் பெற்றுப் பணத்தைப் பெற்று, என்ன பெருமை அடையப் போகிறாய்? வரலாறு உன்னை அடையாளம் காட்டாமல் விடுமா? எதிர்கால மக்கள் உன்னை மன்னிக்கத்தான் போகிறார்களா? அந்தப் பதவியால்தான் நீ என்ன செய்துவிட முடியும்? உனக்கு என்ன மதிப்பு இருக்கிறது? தூக்கி எறியும் எச்சில் இலையைவிட இழிவானதுதானே உனது நிலை? இனக்கேடர்கள் எந்தப் பதவியில் இருந்துதான் என்ன? 'நாய்க்குத் தலையாக இருப்பதைவிட, அரிமாவிற்கு வாலாய்' இருப்பது மேலான செயலல்லவா? இவற்றையெல்லாம் நீ எப்போது உணரப்போகிறாய்? உரிமையுணர்வு பெறப் போகிறாய்?

நூல்கள் வரப் பெற்றோம்.

(இங்கு நூல்நிறைக்கு வரப்பெற்ற நூல்கள் பற்றிய சில விளக்கங்களை வெளியிட்டுள்ளோம். இவற்றுள் சிறப்பான நூல்கள் பின்னர் நூல்நிறைப் பகுதியுள் திறனாய்வு செய்யப் பெறும்).

1) மனைமாட்சி வண்ணம். (பாடல்கள்)

ஆசிரியர்: பாவலர் அருள் செல்லத்துரை.

திருமண நாள் தொடங்கி மகப்பேற்றின் பத்தாம் மாதம் வரை, மனைவியின் மாண்பைப் பல்வேறு கோணங்களில் கணவனே எடுத்துரைக்கும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது. மொத்தம் 55 வண்ணப் பாடல்கள் இதில் உள்ளன. நூலுக்குக் கழக இலக்கியப் புலவர் இரா. இளங்குமரனாரின் முன்னுரை உள்ளது.

விலை; உருவா. 15. பக்கம்: 84.

வெளியீடு: தமிழருவி, பி. 23. அதியமான் நகர், திருச்சி. 13.

2) ஈழத்துப் புலிகளுடன் 28 நாள் (உரைவீச்சு)

ஆசிரியர்: பேரா. சாலை இளந்திரையன்.

ஈழத் தமிழர் விடுதலையை ஆதரித்து எழுதிய 121 உரை வீச்சுகளைக் கொண்ட வீறுணர்வு நூல். சாலையாருக்கே உரிய வீர முத்திரை ஒவ்வோர் உரைவீச்சிலும் பளிச்சிடுகின்றது. கோழைகளையும் நிமிர்க்கும். ஆறிப் போன உள்ளங்களையும் சூடேற்றும் உணர்வெழுச்சி உரைகள்.

விலை: உருவா. 15. பக்கம்: 136.

வெளியீடு: முனைவர். சாலினி இளந்திரையன்.
பேரவை இல்லம். 11. திருவீதியான் தெரு, கோபாலபுரம்.
சென்னை—86.

3) முல்லை (பாவியம்).

ஆசிரியர்: முனைவர். கருவூர். கன்னல்.

முல்லை, இனியன் இருவரையும் கதைத் தலைவியாகவும் தலைவனாகவும் கொண்டு நல்ல தமிழில் எழுதப்பெற்ற எளிய இனிய பாவியம். பாவலர். கன்னல் தூயதமிழ்ப் பற்றாளர். பாவாணர், அண்ணா, கலைஞர், பாவலரேறு ஆகியோரின் மேல் குறையாத பற்றுள்ளவர். தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பரிசு பெற்றவர்.

விலை: உருவா: 22. பக்கம்: 178.

வெளியீடு: தமிழ்ப்பாசறை.
79. தெற்கு நரசிம்மபுரம், கருவூர்: 639001.

4) கட்டுரைகள்:

ஆசிரியர்: குடந்தை வீரா. இராசகோபாலன், இ.க.தே;க.மு.

ஆசிரியர் அவ்வபொழுது எழுதி இதழ்களில் வெளிவந்த 18. கட்டுரைகளின் தொகுப்பு. சில கட்டுரைகள், மொழியியல்

பற்றியவை, சில பாவேந்தர் பற்றியவை, சில தமிழ்மொழி எழுத்துச் திருத்தம் பற்றியவை.

விலை: உருவா: 20; பக்கம்: 108,

வெளியீடு: சேது அம்மாள் பதிப்பகம், சென்னை-14;

5) அறிவியல் குறள் நெறி: (முதல் தொகுதி)
ஆசிரியர்: புலவர் வே. பிரபாகரன்;

திருக்குறளை அறிவியல் நோக்கோடு கண்டு, அதிலுள்ள அறிவியல் நுட்பங்களை எடுத்து இந்நூல் வழி விளக்குகிறார் ஆசிரியர். படித்து மகிழ வேண்டியது, இந்நூல்.

விலை :18 உருவா; பக்கம்: 108;

வெளியீடு: அழகம்மை பதிப்பகம்.
R. 56/11, கோட்டூர்புரம், சென்னை-85;

6) மாணுக்கர் ஆற்றுப்படை. (பாடல்நூல்)
ஆசிரியர்: முனைவர். கடவூர் மணிமாறன்.

மாணுக்கர்களைக் குளித்தலை அரசு மேனிலைப் பள்ளிக்கு ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இப் பள்ளி நூற்றாண்டு விழாக் கண்ட பெருமையுடையது. கழக இலக்கியப் பாடல் மரபு கொண்ட இந்நூல் நல்லதோர் இலக்கியம்;

விலை: உருபா. 4; பக்கம்: 32;

வெளியீடு: விடியல் வெளியீட்டகம்,
109. மேலைத் தெரு, கிருட்டிணராயபுரம்,
திருச்சி மாவட்டம் - 639102;

7) இதழியல், புதிய தொழில் நுட்பங்கள்.
ஆசிரியர்: ஹபீப் —சித்திக் (செய்தியாளர்கள்)

இதழியல் (journalism) தொடர்பான புதிய தொழில் நுட்பங்களைக் (New Technologies) கூறுவது இந்நூல்; இதில் இதழியல், செய்தியாளர்கள், இதழ்கள் வெளியீட்டு ஆளுமை, விளம்பரம், புதிய அச்சுக்கலை, செய்தித் தொடர்பு முதலிய 13 தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் உள்ளன. செய்தியாளர்களுக்கும், இதழாசிரியர்களுக்கும் மிகப் பயனுடைய நூல், இது;

விலை: உருபா; 40 பக்கம்: 126,

வெளியீடு: ஆயிஷா பதிப்பகம்;
5A/804. பாலாஜி நகர், மதுரை: 20.

8) சுதந்திரச் சிறகுகள். (புதுப் பா)
ஆசிரியர்: கார்க்கிராசன்

இதில் ஆசிரியரின் 33 புதுப் பாக்கள் உள்ளன; 32-ஆவது பாடல் தொகுதி 15 நறுக்குப் பாக்களை (ஹைக்கூ பாடல்களைக்) கொண்டது;

பெரியாரியத்தையும் மார்க்சியத்தையும் மேம்படுத்திய கருத்துகள் இப் பாடல்களில் நெருப்புக் கனலாய்ச் சுடர்விடுகின்றன. இளைஞர்களுக்கானவை இவை.

விலை: ஐந்து உருவா. பக்கம்: 48.

வெளியீடு: விடுதலைக் குயில்கள்,
கோ. இராசேந்திரன்
27, வேணுகோபால் கட்டிடம்
255, கொண்ணூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை-23.

9) சுதந்திரம் (சிறுகதைத் தொகுப்பு)

ஆசிரியர்: ஞான பாரதி.

15 சிறுகதைகள் கொண்ட நூல். கதைகளை, ஞானபாரதி, கோவர்த்தனன், சிவ.ரா.சி. தங்கதுரை, விண்மதியான், எழில் அரசன், அரவரசன் ஆகிய அறுவர் எழுதியுள்ளனர்.

விலை: ஒன்பது உருவா. பக்கம்: 80

வெளியீடு: இளங்குயில்கள் இயக்கம்.
130. மதுரைச்சாலை, ஆண்டிபட்டி. 626512.

10) கட்டுரைக் கரும்பு (கட்டுரைகள்)

ஆசிரியர்: புலவர், கல்வி. மு. அன்பரசன்.

இந்நூலுள் 14 பொதுக் கட்டுரைகள் 4 வரலாற்றுக் கட்டுரைகள், 6 பிற கட்டுரைகள் என 41 கட்டுரைகள் உள்ளன. கட்டுரைகள் ஆழமாகவும் நுட்பமாகவும் ஆராய்ச்சி முறையிலும் எழுதப் பெற்றுள்ளன. மாணவர்கள் கட்டுரை எழுதிப் பழகுவதற்கு இவை பயன் தரும்.

விலை; 5 உருபா. பக்கம்: 48.

வெளியீடு: அருள் வெளியீடு.
57, வெங்கடாசலன் தெரு.
இராயபுரம், சென்னை-13.

11) தமிழா! எங்கே உன் பண்பாடு?

ஆசிரியர்: புலவர். சி. வெற்றிவேந்தன்.

தமிழின முன்னேற்றத்தை நோக்கி எழுதப் பெற்ற அருமையான கட்டுரை நூல். பல்வேறு தலைப்புகளைக் கொண்டவை. தன்மானமும் நல்லுணர்வும் நூலுள் மிளிர்கின்றன.

விலை: 3 உருவா. பக்கம்: 34.

வெளியீடு: உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.
நெல்லிக்குப்பம் கிளை,
14. நாகசாமி வீதி, நெல்லிக்குப்பம் - 607105.

இந்தக் கேள்வி—எத்துணை ஆற்றலுடையது! இதில் ஆறுமோ, அவர் குடும்பத்துயர்? ஆனால் அதுதான் அவர்தம் இயல்பு; செ.கணேசலிங்கம் கூறிய 'செவ்வானம்' போன்ற காட்சியவர் பாவலரேறு அவர்கள்!

"நீங்கள் எல்லாம் எனைப் பற்றி வர நினைத்தேன்!
எவ்விடத்தும் எந்நாளும் இழந்தேன், என்னை!"

என்கிறார்; தம்மை. தம் மக்களையன்றி இனம் முழுவதையும் நிலம் காக்க அழைக்கும் குரல் இவ்வரிகளில் புதைந்துள்ளது;

இனநலம் சிந்தித்து முதுமை கண்ட அண்ணல் "இருக்க இடம் இல்லாமல் இடர்கள் உற்றோம்" என்கிறார்; குடியிருக்க வளமனை தந்தபோதும், முறைவழி வாராமையால் வேண்டாமென்றவர் பாவலரேறு அவர்கள். குடிக்கூலிக்கிருக்கும் வீட்டிற்கும் தொல்லை வழக்கு, நெருக்கடி. இவையெல்லாம் தீர உதவும் வகை காண அன்பர்கள் ஆர்வலர்கள் முயல்வார்களாயின் மகிழ்வேன்!

பாடல்கள் 7, 8, 9 பாவலரேறு அவர்களின் வாழ்க்கை முறையை ஒளிபெற விளக்குவன; நம் நெஞ்சை உலுக்குவன; அதை மீட்டெழுதவும் என் கைகள் நடுங்குகின்றன.

'உலவும் உங்கள் உணர்வு, உயிர்க்குள் உள்ளேன்' என்றார் பாவலரேறு அவர்கள்; 'அங்கும் இங்கும் ஊசாடாமல்' அவருடன் உள்ளார் என்னும் துணிவோடு தொடர்வோம், தொட்ட பணி!

—பறம்பை அறிவன், பறம்புக்குடி;

O; 1541 : பேரன்பின் தமிழ்நலஞ் சான்ற ஐயா, வணக்கம்; தங்களின் நலன் சிறக்கப் பெரிதும் விழைகிறேன்.

தங்களின் விடுதலை குறித்துப் பெரிதும் மகிழ்வடைகின்றேன்; செய்தித்தாளின் வந்து மூன்று நாள்கள் கழித்தே அறிய நேர்ந்தது. பின்னர் அனைத்து நாளிதழ்களிலும் கண்ணுற்றேன். இச் செய்தியை அறிந்தவுடன் தாங்கள் 'மிசா'வினின்று வெளிவந்த போழ்து வந்த 'தென்மொழி'யின் பாடல்தான் நினைவுக்கு வந்தது.

"கதவு திறந்தது;
கதிர்வான் எழுந்தது!
கால்நடை கொண்டது
கடும் பணிக்கே!
உதவும் உளங்கள் ஒன்றின—மீண்டும்
உயிர்த்தேன் தமிழெனும் கண்மணிக்கே"!
ஆண்டா நடந்தது?
அணுச் சிதைவில்லை;
அடடா, உயிர் உளம் உடலினிலே!
பூண்ட என்கோள் நலம், புதுமைத் தோள் நலம்;
புதுப்புது விளைவுகள் நடையினிலே!

தங்களின் உயிரனைய பணி என்றும் தமிழ் மொழி, இன, நாட்டிற்கும் உரித்தான ஒன்று. மெய்யென்றும் வென்றே நிற்கும்.

இச் சிறை இக்கால் பல தமிழர்களைத் தட்டி எழுப்பப் வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளதென்பதை மறந்துவிட இயலாது.

ஐயா, தாங்கள் சிறையிலிருந்தபோது அம்மாவுடன் ஒரு முறையும், தம்பியுடன் ஒரு முறையும் வந்தும் காண முடியாது போயிற்று. அலுவலகம் வந்து தங்களின் மடல்களையெல்லாம் படித்து மகிழ்ந்து பேருணர்வும், பெரிய மகிழ்வும் அடைந்தேன்; விரைவில் சென்னை வந்து தங்களைக் காண இருக்கிறேன்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்—இதழ்கள் தாங்கள் சிறையிலிருந்தபோதும் அதே பொலிவுடனும், அமைப்புடனும் செய்திகளுடனும் நன்றே வெளிவந்தன. நிறைய செய்திகள் அறிய மிகவும் பேரவா. மெய்ப்பொருள்விளக்கவுரை காணவும் பெரு வேட்கை!

'தென்மொழி'யும், 'சிட்டும்' வந்து சேர்ந்தன. அட்டைப் பாடலும், உள்ளுறைகளும் நேர்த்தியாக உள்ளன. தேனம்மாவுக்கு எழுதிய மடல் என் நெஞ்சினைப் பிழிய வைத்திட்டது. உள்ளத்துணர்வுகளை உள்ளவாறே பதிய வைத்துவிட்டீர்கள். எதுகைக்கும் மோனைக்கும் உவம நலன்களுக்கும் குளு குளு இடம் தேடும் குள்ளநரிக் கூட்டங்கள் நிறைந்த இத் தமிழ் மண்ணிலே, சிறையில் தாங்கள் உதிர்த்துவரும் பொன் மணிகள் அளவிலா மதிப்பு வாய்ந்தவை. எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் தங்களின் பூட்கை தளரா பெருமுயற்சி பயனளிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. தமிழுக்காக வாழும் தாங்கள் தங்களையே விற்றுவிட்டீர்கள். அத்துணை அறிய வயிர மணிப் பாடல்களாம் அவை.

ஐயா, அங்ஙனமே "உழைக்கும் மக்கள் தமிழகத்தில்" திருமாவளவனின் தங்களின் நெஞ்சுணர்ந்த பாடலும் வெகு சிறப்பாயிருந்தன. இம்மாத 'நாற்காலி' தற்செயலாய்க் காண நேர்ந்தது. நான்கு பக்க நேருரை மிகவும் சிறப்பாய் அமைந்தது. படம் (Xerox) எடுத்து சில அன்பர்களுக்குக் கொடுத்துள்ளேன்.

அன்புடன், —குழந்தை. ஈகவரசன், திருச்சி-16.

O : 1542 : மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வீரஞ்செறிந்த பெருமைமிகு ஐயா அவர்களுக்கு வணக்கம். பெரியீர் தாங்கள் பிணையலில், விடுதலை பெற்ற செய்தி வானொலி மூலம் அறிந்தேன். பேருவகை கொண்டேன். இன்னும் வியப்பு, வானொலி கூடத் தங்கள் விடுதலையை அறிவிக்குமளவில் தன் நிலையை மாற்றிக் கொண்டது. இதற்குக் காரணியம், தங்களது வீரஞ்செறிந்த துணிவேயாகும். 'ஞாயிற்றைக் கை மறைப்பதில்லை' எனப் பழமொழிப் பாடல் ஒன்று உண்டு. அதுபோல, உண்மையை உழைக்கும் தொண்டரை எவ்வளவு நாள் சிறைக் காவல் வைக்க முடியும்? தங்கள் கொள்கை உறுதியானது. தங்களை மேலும் பல படிகள் உயர்த்திவிட்டது. தங்களின் மொழி, இன நலத் தொண்டானது மேலும் முடுக்கம் பெறும் என நம்புகிறேன். என் போன்றோர் பங்களிப்பு என்றும் உண்டு.

—அன்பன். புலவர். அறிவுடைநம்பி, மூலனூர்.

O : 1543 : அய்யா, வணக்கம். 'நாற்காலி' முதல் இதழில் தங்களின் நேருரை கண்டு மகிழ்ந்தேன். 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை' தமிழினத்திற்குக் கிடைக்க விருப்பது அறிந்து மகிழ்கின்றேன். தமிழர் பண்பாடு பற்றி ஆய்வு நூலொன்று எழுதிட வேண்டுகிறேன். விடுதலை நாளிதழில் தங்களின் கடிதம் வெளிவந்த பின்னர், நாற்காலியில் தந்தை பெரியார் பற்றி மதிப்பீடு செய்துள்ள பின்னர், அய்யா கண்ட இயக்கம் வெற்றிபெறத் தாங்கள் இணைந்து பணியாற்ற வருவீர்கள் என்றே எதிர்பார்க்கின்றேன். தொடரட்டும். மொழி, இனப் பண்பாட்டுப் புரட்சிப் பணிகள்.

அன்பன்,

—ஆ. மாடசாமி க. மு. இலக். இ. சோழபுரம், தெற்கு.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600-005. (தமிழகம்)